985

# குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ.கே.செட்டியார்

# The India Leather Corporation Ltd.

PREMIER EXPORTERS OF
E. I. TANNED HIDES. KIPS & SKINS

- Kips (Cow Hides)
- Cowcalf Skins
- Buffalo Hides
- Buffcalf Skins
- Goat Skins
- Sheep Skins

9. DAVIDSON STREET
G. P. O. BOX - 1516
MADRAS - 1

## தி இந்தியா லெதர் கார்ப்பொரேஷன் லிமிடெட்

9. டேவிட்ஸன் தெரு
தபால் பெட்டி — 1516
சென்னை - 1

Phone 35069:
2059

Grams : "TANDRIGHT"

11 SEP 1958
MADRAS




பொரபுதூரிலுள்ள தியான புத்தர்.

எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்.

# ANNOUNCEMENT.




## "TEXTOOL"

**TAKES PRIDE TO ANNOUNCE THAT THEIR 4 CYLINDER 36 To 86 H. P. AUTOMOTIVE DIESEL ENGINES**

will be out in the market Soon!!

Await Further News !!!

MANUFACTURERS:-

**Textool Company Limited,**

**Post Box No. 221,**

COIMBATORE.

**Phone:** 409 1409

**Gram:** 'TEXTOLCO'



கல்யாணகாலங்களுக்கு.
உயர்ந்த
பட்டு
&
நூல்
ஜவுளிகள்
கிடைக்குமிடம்
S·R·B·K
ORIGINAL SHOP
S.R.B. குப்புசாமி அய்யர் & சன்
(பழய விலாஸம். S.R.B & SONS)
போன்.
117, நைமினியப்பநாயக்கன் தெரு, சென்னை. 3506
230, கீழமாரட்வீதி, மதுரை. போன். 36.

# இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் லிமிடெட்

(இந்தியாவில் இணைக்கப்பெற்றது)

தலைமைக் காரியாலயம் : எஸ்பிளேனேடு, சென்னை

**சேர்மன் : M. CT. முத்தையா**

ஜெனரல் மானேஜர் : **C. P.** துரைக்கண்ணு

கிளைகள் :

பம்பாய் — கல்கத்தா — சென்னை — புதுடில்லி — ஹைதராபாத்

மற்றும் தென்னிந்தியா முழுதும்

மலாக்கா — சிங்கப்பூர் — ஈப்போ — பினங்கு

கிள்ளான் — கோலாலம்பூர் — கொழும்பு

பாங்காக் — ரங்கூன் — ஹாங்காங்

எல்லா வித பாங்கிங் அலுவல்களும் செய்கிறோம். வெளிநாடுகளில் வியாபார முள்ளோரின் தேவைக்கான வசதிகளைச் செய்ய இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் நன்கு அமைந்திருக்கிறது.

உலக முழுவதும் முக்கிய வியாபார
நகரங்களில் ஏஜண்டுகள் உண்டு

# குமரி மலர் வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மலேயா முதல் கானடா வரை | ரூ. | 2 – 50 |
| 2. | அமெரிக்க நாட்டில் | ,, | 5 – 00 |
| 3. | கரிபியன் கடலும் கயானாவும் | ,, | 4 – 00 |
| 4. | உலகம் சுற்றும் தமிழன் | ,, | 2 – 00 |
| 5. | பிரயாணக் கட்டுரைகள் | ,, | 1 – 50 |
| 6. | அண்டை நாடுகள் | ,, | 0 – 90 |

வெளிவந்துவிட்டன.

●

**ஐரோப்பா வழியாக**

**விரைவில் வெளிவரும்.**

மலர் 15 குமரி மலர் இதழ் 5

விளம்பி - புரட்டாசி

# உள்ளுறை

பக்கம்

1. நடராஜா — ஆர். ராஜமய்யர் 1
2. கேள்வியும் பதிலும் காந்தியடிகள் 5
3. நல்லுரை 12
4. சுகாதாரம் 15
5. வராஹ நதித் திட்டம் — டி. கே. பார்த்தசாரதி 20
6. மலேரியா ஒழிப்பு — பி. அனந்தஸ்வாமி ராவ் 25
7. வான வீதியிலே — எஸ். ஸ்ரீநிவாசன் 31
8. கொய்த மலர்கள் 44
9. வைத்தியசாலை நண்பர்கள் — வெண்டி ஹால் 51
10. சுவாமி பரமானந்தரின் கடிதம் 54
11. இந்திய யூனியன் பிரதேசங்கள் 56
12. வாழ்க்கைச் செலவுபற்றி ஆராய்ச்சி 60
13. இந்திய ரயில் 63
14. மெட்ரிக் அளவு முறை 67
15. அமெரிக்கக் கல்வி முறை 74
16. அமெரிக்காவில் தொழிலாளர் தினம் 79

# நடராஜா

ஆர். ராஜமய்யர்

நடராஜா என்ருல் அரங்கத் தலைவன் என்று பொருள். உலகமே ஒரு நாடகமேடை; சர்வ வியாபியான ஆத்மா அல்லது கடவுள் ஆட்டி வைத்தபடி ஆடும் பொம்மலாட்டம். அந்தத் தரிசனத்தையே நடராஜ சொரூபம் குறிக்கிறது.

"நீ ஆட்டிவைத்தால் யார்தான் ஆடமாட்டார்? நீ பாடவைத்தால் யார்தான் பாடமாட்டார்?" என்று கேட்கிருர் ஒரு வேதாந்தப் புலவர்.

உள்ளுறையும் ஆத்மா இல்லாவிட்டால், உலகம் முழுதுமே வெறும் ஜடமாகத்தான் இருக்கும்.

மனித மனத்தைச் சீர்திருத்தும் உண்மைக் குரு நாதன் ஆத்மாவே. ஆதலால், குருநாதனைக் குறிக்கத்தான் நடராஜா. இருவகைக் குருநாதர் உண்டு. வெளிப்படையும் உண்மையும், கண்களுக்குப் புலனுவதும் புலனுகாததுமான இருவகை. வெளிப்படையாய்க் கண்ணுக்குப் புலனுகும் குருநாதன், தமது சீடனுக்குப் போதனைகள் புரிந்து, ஞான மார்க்கத்தில் அழைத்துச் செல்வார். இதுதான் குரு என்பதற்கு வழக்கமான பொருள். ஆனுல் உண்மையான போதனை அகத்திருந்தே பிறக்கிறது. புறக் குரு, ஆத்மா அல்லது கடவுளின் கைக் கருவியே ஆவார். அது மாத்திர மன்று; சகல வளர்ச்சியும் உள்ளிருந்தே உண்டாகிறது. உதாரணமாக, செடியின்

வளர்ச்சி உள்ளிருந்தே உறுகிறது; எருவும் நீரும் அந்த வளர்ச்சிக்கு உதவிதான் புரிகின்றன.

இதே விதமாக, மனமும், குருநாதனின் போதனைகளை ஜீரணித்துக் கொண்டு, உள்ளிருந்தே வளர வேண்டும். எனவேதான், உண்மைக் குருநாதனின் சொரூபமாக நடராஜா உருவகிக்கப் பெற்றிருக்கிறார். குருநாதனின் முக்கியமான தர்மம், தாம் எதை உபதேசிக்கிறாரோ அதுவாகத் தாமே இருப்பதுதான். தம் உபதேசத்தைத் தமது நடத்தையிலேயே உதாரணம் காட்டுவதுதான். நடராஜ சொரூபத்தின் உட்கருத்து இதுவே யாகும்.

வலது கைகளுள் ஒன்றில் உள்ள சின்னஞ் சிறு உடுக்கு, சர்வ உலகத்துக்கும் மூலகாரணமான சப்தத்தைக் கடவுள் அல்லது குருநாதர் தம் கையிலேயே வைத்திருக்கிறார் என்பதைக் குறிக்கிறது. அதாவது, அகில உலகங்களையும் தம் உள்ளங்கையிலே ஆண்டவன் வைத்துக் கொண்டிருக்கிறார்; அவர் இஷ்டப்பட்டால் அவற்றை விரிக்கவும் சுருட்டவும் அவரால்முடியும் என்பதேகருத்து.

ஞானிக்கு, அவன் இஷ்டப்பட்டால்தான் உலகம் உண்டு; இல்லையாயின் இல்லையே யாகும்.

ஒரு புறமுள்ள மான், மனத்தைக் குறிக்கிறது. மானைப் போலத்தானே மனமும், விஷயக் கூட்டங்களில் ஒன்றிலிருந்து ஒன்றில் காட்டுத்தனமாய்த் தாவிக் குதிக்கிறது. மானைப் போன்ற மனத்துக்கு எட்டாத வெகு தூரத்திலே ஆத்மா இருக்கிறது. ஆதலால்தான், நடராஜ சித்திரத்தின் கால்களுக்கருகே நிறுத்தப் பெற்றிருக்கிறது இந்த மான்.

நடராஜா ஒரு புலித்தோலைப் போர்த்திருக்கிறார். புலித்தோல், அகங்காரத்தைக் குறிப்பிடுவதாகும்.

அகங்காரத்தைத் தாக்கினல், அது மிருகத்தனமாய், மூர்க்கமாய்,குரூரமாய் எதிர்த்துப் போராடுகிறது. ஆனல், அதைக் கொன்றே தீர வேண்டும்; குருநாதனுன நடராஜா ஒருவரால்தான் அதைக் கொல்ல முடியும்.

நடராஜா தம் தலையிலே கங்கையை அதாவது ஞானத்தை வைத்துக் கொண்டிருக்கிருர். அது மிகக் குளுமையாய், ஆயாசம் தீர்ப்பதாய் இருக்கிறது. கங்கையுடன் சந்திரனையும் அவர் தரித்திருக்கிருர். அது ஆத்மாவின் சுயம்பிரகாசத்தையும் ஆனந்தத்தையும் குறிப்பதாகும்.

முயலகன் என்ற அசுரன்மீது நடராஜாவின் ஒரு கால் அழுத்தி நசுக்குகிறது. அந்த அசுரன்தான் மகா மாயை. பிறப்பு இறப்புக்களுக்குக் காரணமான முடிவற்ற மயக்கமே மாயை.

நடராஜாவின் மற்ருெரு கால், ஊர்த்துவ முகமாய்த் தூக்கியிருப்பது, துரீய நிலையைக் காட்டுகிறது. விழிப்பு, கனவு, கனவற்ற தூக்கம் ஆகிய மூன்று நிலைகளையும் கடந்து உயர்ந்தது 'துரீய' நிலை. அந் நிலையில் மனமும் மாயையும், உலகமும் அற்று விடுகின்றன.

இரண்டாம் வலக்கை சாந்தியைக் குறிக்கிறது- ஞானத்தினல் கிடைக்கும் பாக்கியமான சாந்தி.

இடது கைகளுள் ஒன்றில் அக்கினி இருக்கிறது. தமது உபதேச உண்மைக்கு அத்தாட்சியாக ஆத்ம ஜோதியையே குருநாதன் கொண்டு வருகிருர். குருவின் உபதேசத்தை அனுபவத்தால்தான் பூரணமாய் அறிந்து கொள்ளமுடியும் என்பது கருத்து.

நாட்டியசாலை தில்லைவனம். சரீரம் — அண்டம், பிண்டம் இரண்டின் சரீரமும்தான் — வனம் என்று

சொல்லப்படுகிறது. ஏனெனில் அச் சரீரத்தில் எண்ணற்ற பொருள்கள் அடங்கியிருக்கின்றன. நாட்டிய சாலையிலுள்ள நடன அரங்கம் மசானமாகும். உலகக் காட்சியின் காரணமான சகல இச்சைகளும் நாம ரூபங்களும் அங்கே எரித்துவிடப் படுகின்றன. புறப்பொருள் எதனிலும் நசையற்று மாயை யொழிந்து புனிதப் பிரஞ்ஞையே மிஞ்சுகிறது.

இவை, நடராஜ சொரூபத்தின் சில முக்கிய தத்துவங்கள்.

"மாயையை நசுக்கு, உலகம் நமக்கு அடிமைப்பட வேண்டும்; உலகத்துக்கு நாம் அடிமைப் படலாகாது. மானைப் போன்ற மமதையை விட்டொழி. இச்சைகளும் மயக்கமும் ஒழிந்த, தூய, பந்தமற்ற, உன்னதப் பிரஞ்ஞையை அடை. உனது பிறப்புரிமையான சாந்தியைப் பெறு. ஆத்ம சொரூபமான சச்சிதானந்தத்தை அனுபவி" என்றே குருநாதர் உபதேசிக்கிறார்.

இந்தப் புதைப் பொருள்களை நோக்கும்பொழுது, நடராஜ விக்கிரகம் அர்த்தமற்றதோர் மர அல்லது பித்தளைப் பதுமை யன்று என்று புலனுகும்; உள்ளத்தைத் தூண்டி உயர்த்துவிக்கத் தக்க, மகோன்னத உபதேசத்தைப் புரியும் சின்னமே அது என்று விளங்கும்.

# கேள்வியும் பதிலும்

---

காந்தியடிகள்

கேள்வி: எனக்கு இருபத்தொரு வயதாகிறது. நான் வியாபாரம் செய்கிறேன். பதினேரு பேரைக் காப்பாற்றவேண்டியவனுக இருக்கிறேன். நான் உண்மையிலும் அஹிம்சையிலும் நம்பிக்கையுடையேன். ஆனுல் நான் அவற்றை வியாபாரத் துறையில் பரிபூரணமாக உபயோகிக்க முடியவில்லை. இந்த நிலையில் நான் செய்ய வேண்டுவது யாது? நான் வியாபாரத்தை விட்டுவிட்டால் என்னைச் சார்ந்து நிற்பவர்களுக்கெல்லாம் கஷ்டம் உண்டாகி விடும்.

பதில்: இவர் எதை முடியாது என்று கூறுகிருரோ அதை முடியும் என்று எண்ணுவதாகவே தோன்றுகிறது. வியாபாரத்தை முற்றிலும் யோக்கியமாக நடத்துவது என்பது கஷ்டமான காரியந்தான். ஆனுல் முடியாத காரியமன்று. உண்மை யாதெனில் எவ்வளவுக் கெவ்வளவு வியாபாரத்தை யோக்கியமாக நடத்துகிருேமோ அவ்வளவுக் கவ்வளவு அதில் அதிகமான வெற்றியைக் காண்கிருேம். "நாணயம்தான் தலை சிறந்த வெற்றி மார்க்கம்" என்று வியாபாரிகள் சிருஷ்டித்த பழமொழி உண்டாகியிருக்கிறது. இந்த நிருபரிடமுள்ள குறை, விடாமுயற்சியின்மையும், யோக்கியமாக வியாபாரத்தை நடத்தும் முறை நன்ருகத் தெரியாததுமே யாகும்.

நாணயத்திற்கும், பெரும்பொருள் சேர்ப்பதற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. "ஊசித் துவாரத்தின்

வழியாக ஒட்டகம் நுழைந்தாலும் நுழையலாம்; கடவுள் ராஜ்யத்துக்குள் பணக்காரர் ஒரு நாளும் நுழையமுடியாது." அத்துடன் நாணயமாக வியாபாரம் செய்ய விரும்புகிறவர் எவ்வளவு திறமை யுடையவராக இருந்தாலும், கூடின தொகையினராலுைம் சரி, குறைந்த தொகையினராலுைம் சரி, சோம்பேறிகள், யாரையும் காப்பாற்றக்கூடாது. இந்த நிருபர் காப்பாற்றிவரும் பதினேரு பேரும் குழந்தைகளாகவோ, வேலைசெய்ய முடியாதவர்களாகவோ இருக்க முடியாது.

வியாபாரிகள் நாணயமாக நடந்து கொள்வதில் எவ்விதக் கஷ்டமும் கிடையாது. நாணயமாக நடப்பவர்களுக்கு நாணயமாக நடவாத பந்துக்கள் இருக்கக் கூடாது. இந்த நிருபர் தம்மையே ஆராய்ந்து பார்ப்பாரானல், நாணயமான வியாபாரத்தில் கஷ்டமொன்றும் கிடையாது என்பதையும், தம்மிடத்திலேயே ஏதோ ஒரு குறை இருக்கிறது என்பதையும் கண்டு கொள்வார். அந்தக் குறை எதுவென்று கண்டு கொண்டால் அவருக்கு நல்லதாகும்.

கேள்வி:- இறக்கும் நேரம், இடம், முறை இவற்றை எல்லாம் வல்ல இறைவன் எல்லோருக்கும் தனித் தனியாக ஏற்படுத்தியிருக்கிருனு? அப்படி ஏற்படுத்தியிருந்தால் நாம் நோயாய் இருக்கும்பொழுதுகூட ஏன் கவலைப் படவேண்டும்?

பதில்: இறக்கவேண்டிய நேரம், இடம், முறை முன் கூட்டியே ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதே. இதையும் கூடத் தெளிவாக அறியேன். இன்று தெளிவாக இல்லாவிட்டாலும், பிரார்த்தனை செய்து எதிர்பார்த்து

நின்றால் நாளையேனும் அதற்கு மறு நாளேனும் தெளிவாகிவிடும். ஆயினும் ஒரு விஷயத்தை மனத்தில் தெளிவாக ஆக்கிக் கொள்ளவேண்டும். சர்வ வல்லமையுள்ள இறைவன் நம்மைப் போன்ற ஓர் ஆள் அல்லன். அவனை உலகத்தில் காணப்படும் தலைசிறந்த ஓர் ஜீவ சக்தியென்றோ, தர்மம் என்றோதான் சொல்லவேண்டும். ஆதலால் அவன் நினைத்ததை நினைத்தபடி செய்யமாட்டான். அவனுடைய சட்டத்தைத் திருத்தமுடியாது. அவனுடைய எண்ணத்தை மாற்றமுடியாது. மற்றவைதான் நிமிஷம் தோறும் மாறிக்கொண்டிருக்கும்.

இறைவன் விதித்தபடி நடக்கும் என்பதைக் கொண்டு நாம் நோயாயிருந்தாலும் கவலைப்படவேண்டியதில்லை யென்று சொல்ல முடியாது. நோயாவதைவிட நோயை அலட்சியம் செய்வது பெரிய குற்றமாகும். நாளுக்கு நாள் முயற்சிசெய்து முன்னேறுவதற்கு முடிவு கிடையாது. நாம் ஏன் நோய்வாய்ப்பட்டோம் என்று கவலைப்படுவதும், காரணத்தைக் கண்டுபிடிப்பதும் அவசியமாகும். ஆரோக்கியம்தான் இயற்கையின் சட்டமேயன்றி ஆரோக்கியமின்மை யன்று. நாம் நோயாகாமல் இருக்கவும், நோய்வாய்ப்பட்டால் குணமடையவும் விரும்பினால் இயற்கைச் சட்டத்தை அறிந்து அதன்படி நடப்பது கடனாகும்.

கேள்வி:- தாங்கள் தங்களுடைய கோரிக்கைகளை லண்டனில் நடைபெறப்போகும் இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டில் எந்த விதமாகக் கூறப் போகிறீர்கள்?

பதில்:- எந்த விதமாகவா? நாட்டுப்புறத்தானைப் போலத்தான். சாதாரணமாக எல்லோருக்கும் அர்த்தமாகக் கூடிய எளிய பாஷையில்தான். எவரேனும்

அரசியல் நுணுக்கங்களைப் பற்றி விஸ்தாரமாகப் பேசவோ, வாதம் செய்யவோ ஆரம்பித்தால், 'ஐயா,' நான் பட்டிக்காட்டான். இந்த வாதங்கள் எதுவும் என்னுடைய மூளைக்கு எட்டவில்லை. எனக்கு வேண்டுவது இது; அதைத் தருவீர்களா? தரமாட்டீர்களா?'' என்று கேட்பேன். நான் கூறுவதை யாரும் காதில் போட்டுக் கொள்ள விரும்பவில்லையானால், "என்னை ஏன் வீணுகக் காக்க வைக்கிறீர்கள், எனக்கு விடை கொடுங்கள்'' என்று கூறுவேன்.

கேள்வி:- சுதந்திர இந்தியாவில் கல்வி, மதம், அரசாங்கம் மூன்றுக்கும் உள்ள தொடர்பு என்ன?

பதில்:- அரசாங்கம். மதத் தொடர்பு எதுவும் இல்லாத தாகவே இருக்க வேண்டும். மக்கள் யாராலும் அரசாங்கச் சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடப்பதாய் இருந்தால் தம்முடைய இஷ்டப்படி தம் மதத்தைப் பின்பற்ற உரிமையுடையவராக இருக்க வேண்டும். மத மாற்றம் செய்ய எண்ணுகிறவர்களைத் தடுக்கக் கூடாது. ஆனல் இதுவரை நடந்து வந்த அந்நிய அரசாங்கம் ஒரு மதத்தார்க்கு உதவி செய்துவந்ததுபோல் இனிமேல் அரசாங்கம் யாருக்கும் உதவி செய்யலாகாது.

நாம் அரசியல் அடிமைத்தனத்தை அகற்றிவிட்ட போதிலும், பண்பாட்டு அடிமைத்தனத்தை நாம் இன்னும் அகற்றிவிடவில்லை. கண்ணுக்குப் புலனுகும் அந்நிய ஆட்சியை நாம் நீக்கி விட்டோம். ஆனல் கண்ணுக்குப் புலனுகாத அந்நிய மோகத்தை நீக்கவில்லை. நான் கனவு காணும் புது இந்தியா தன்னுடைய இயல்புக்கு ஏற்ற வண்ணம் தன்னுடைய புதிய வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு தேசமும் ராணுவத்தை வைத்துக் கொண்டிருக்கிறது. அதனைத்

தற்காப்புக்காக வைத்துக் கொண்டிருப்பதாகக் கூறுகிது. ஆனால் அதெல்லாம் பலாத்காரமேயன்றி வேறன்று. அது அற வாழ்க்கைக்கு முற்றிலும் முரண்பட்டதே யாகும். மனிதனிடம் சிறந்தவற்றிற்குச் சிறப்புத் தரும் ஸ்தாபனமே அமையவேண்டும். அது அமைய வேண்டு மானால் இப்பொழுது காணப்படும் அக்கிரமங்கள் எல்லாம் ஒழிந்துவிடவேண்டும்.

கேள்வி:- நான் தங்கள் யோசனைப்படி ராமநாம பஜனை செய்து வருகிறேன். அதன் காரணமாகக் குண மடைந்தும் வருகிறேன். க்ஷயரோகத்திற்காக வைத்திய சிகிச்சையும் நடந்து வருகிறது. குறைவாக உண்பதும், சரியான உணவை உண்பதும் ஆரோக்கியத்தைத் தரும் என்றும் ஆயுளை அதிகரிக்குமென்றும் தாங்கள் எழுதி யிருக்கிறீர்கள். நான் சென்ற இருபத்தைந்து வருஷ காலமாகக் குறைவாகவே உண்டு வருகிறேன். அப்படி யிருக்க எனக்கு க்ஷயரோகம் வரவேண்டிய காரண மென்ன?

மனிதன் நூற்றிருபத்தைந்து வயதுவரை வாழமுடி யும் என்று சொல்லுகிறீர்கள். அப்படியானால் உங்களுக்கு எவ்வளவோ உதவியாய் இருந்த மகாதேவ தேசாயைக் கடவுள் ஏன் இவ்வளவு சீக்கிரத்தில் அழைத்துக் கொண்டு போகவேண்டும்? அவர் நல்ல உணவை அள வாகத்தானே சாப்பிட்டார். அவர் தங்களைக் கடவுளாகப் பாவித்து ஊழியமும் செய்தாரே? அவர் ஏன் இருதய நோய்க்கு இரையானார்? கடவுள் அவதார புருஷராகக் கருதப்படுகிற ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், க்ஷய ரோகத்தைப் போல கொடிய நோயான புற்று நோய்க்கு இரையானார். அதை எதிர்த்து நிற்க அவரால் ஏன் முடியாமலிருந்தது?

பதில்:- ஆரோக்கியம் சம்பந்தமாக எனக்குத் தெரிந்த சுகாதார விதிகளை நான் விளக்கி வந்திருக்கிறேன். நல்ல உணவின் அளவு எல்லோருக்கும் ஒரே விதமாக இருக்காது. அது விஷயமான நூல்களைப் படித்து கவனமாகச் சிந்தித்துத்தான் ஒவ்வொருவரும் தமக்கேற்ற அளவை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதும்கூட பிழை நேர்ந்து விடலாம். நன்ருக அறியாமலும் இருந்து விடலாம். அதனுல்தான் பெரியவர்கள் வாழ்வை ஒரு சோதனைச்சாலை யொன்று சொல்லுகிருர்கள்.

நாம் பிறர் அனுபவத்திலிருந்து விஷயங்களை அறிந்துகொண்டு முன்னேற வேண்டும். அதில் இடையூறு ஏற்பட்டால் பிறரை மட்டுமின்றி தம்மைக் கூட குறை கூறிக்கொள்ள வேண்டியதில்லை. எந்த விதியையும் உடனேயே குறைகூற ஆரம்பித்து விடக்கூடாது. சிந்தித்துப் பார்த்தபின்பும் தவருகத் தோன்றுமானுல் சரியான விதியைத் தெரிந்து சொல்ல வேண்டும். உங்கள் நோய்க்குப் பல காரணங்கள் இருக்கலாம். நீங்கள் பஞ்ச பூத சக்திகளை சரியானபடி உபயோகித்தீர்களா இல்லையா என்பதை யார் சொல்லமுடியும்? இயற்கை விதிகளை நான் நம்பி வருவதால் நீங்கள் ஏதோ தவறு செய்திருக்கிறீர்கள் என்று சொல்ல வேண்டியவனுக இருக்கிறேன். சுகாதார விதிகள் தவருனவை என்று கூறுவதைவிட, மகாதேவ தேசாயும், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் தவருக நடந்து கொண்டார்கள் என்று கூறுவதே பொருத்தமாகும்.

இந்த விதிகள் என்னுடைய சிருஷ்டிகள் அல்ல. அனுபவசாலிகள் கூறும் இயற்கை விதிகளாகும். நான் அவற்றை நம்புகிறேன்; அனுசரித்து நடக்க முயன்று வருகிறேன். எப்படிப் பார்த்தாலும் மனிதன் பரிபூரணத் தன்மை இல்லாதவனே ஆவன். அவன் எப்படி உண்மை முழுவதையும் அறிந்துகொள்ள முடியும்?

இந்த விதிகளை ஆங்கில வைத்திய முறை பயின்றவர்கள் நம்பவில்லை என்பதையும், நம்பினாலும் வேறு பொருளிலேயே நம்புகிறார்கள் என்பதையும் கொண்டு இந்த விதிகளைத் தவறு என்று கூறிவிடமுடியாது. நான் கூறிய எதுவும் மேலே கூறிய இருவருடைய மகிமையையும் குறைத்துவிடாது. குறைத்து விட இடங் கொடுக்கவும் கூடாது.

கேள்வி:- கடவுளே விதியாகவும், விதியை வகுத்தவராகவும் இருக்கிறார் என்று தாங்கள் கூறியிருக்கிறீர்கள். அது எனக்கு விளங்கவில்லை. சட்டங்கள் மனிதரால் செய்யப்படுகின்றன. அவை காலத்துக்குக் காலம் மாறி வருகின்றன. திரௌபதைக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள். அப்படியிருந்தும் அவளைப் பதிவிரதையென்றே கருதி வந்தார்கள். இப்பொழுது அப்படி நடப்பவளைத் தவறு செய்பவளாகவே கருதுகிறார்கள்.

பதில்:- நான் சட்டம் என்று சொன்னது கடவுள் வகுக்கும் சட்டத்தையே யாகும். அந்தச் சட்டத்தை மனிதர்கள் தங்கள் அறிவுக்கு ஏற்றவாறு அர்த்தப் படுத்திக் கொள்கிறார்கள். உதாரணமாக பூமி சுற்றுவது இயற்கை விதிகளில் ஒன்று. இன்று நாம் அதைச் சரியானதாகவே நம்புகிறோம். ஆனால் கலிலியோவுக்கு முன்போ வானசாஸ்திரிகள் வேறு விதமாக எண்ணி வந்தார்கள்.

மகாபாரதமானது அறிவு புகட்டுவதற்காக மறைமுகமாக ஏற்பட்ட கதையே அன்றி நடந்ததைக் கூறும் சரித்திரம் அன்று. திரௌபதை என்றால் ஒரு பெண்ணாக எண்ணக் கூடாது. ஐம்புலன்களோடு சேர்ந்துள்ள ஆன்மா என்றுதான் அர்த்தப்படுத்த வேண்டும்.

# நல்லுரை

[காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் சென்னையில் நிகழ்த்திய உரைகளில் இருந்து தொகுத்தது.]

என்னென்ன காரியங்களை ஒருவன் செய்ய வேண்டும், என்னென்ன காரியங்களை ஒருவன் செய்யக்கூடாது என்பதில் சாஸ்திரங்களே பிரமாணம். சாஸ்திரங்களை அறிந்து அவற்றின் கட்டளைப்படி நடக்க வேண்டுவதே நமது தர்மம்.

எல்லா மதங்களும் மோட்சத்தை யடையும் உபாயத்தைத் தெரிவிக்கின்றன. தெய்வ பக்தி, உண்மையைப் பேசுவது, பிறருக்கு உதவி செய்வது முதலிய அடிப்படை அம்சங்களில் மதங்களுக்குள் வித்தியாசமில்லை. சில கொள்கைகள் ஆசாரங்கள் பற்றியே வித்தியாசங்கள் உள்ளன. இந்தக் கொள்கைகள் ஆசாரங்கள் எல்லாம் ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்த மகான்களின் வெவ்வேறு அனுபவத்தைப் பொறுத்து ஏற்பட்டவை. அதனால்தான் ஹிந்து மதத்தில் மத மாறுதல் ஆதரிக்கப்படவில்லை. ஒருவன் தன்னுடைய மதத்தை உண்மையுடன் பின்பற்றினால் அவனுக்கு மோட்சம் கிடைக்கும் என்பது நமது நம்பிக்கை. அதுதான் எல்லா மதங்களினுடைய லட்சியம். எனவே ஒரு மதம் உயர்ந்தது, மற்றொன்று தாழ்ந்தது என்ற சர்ச்சைக்கு அவசியமில்லை. சமரசத்தை வளர்ப்பதுதான் அறிவுடைமை.

சமத்துவக் கொள்கை இப்பொழுது நமது வாழ்வின் ஒவ்வோர் அம்சத்திலும் புகுகின்றது. தற்கால சீர்திருத் தக்காரர்கள் மனிதனுக்கு மனிதன் இருக்கும் வித்தியா சத்தை ஒழிக்க வேண்டுமெனக் கூறுகிறார்கள்.

சமதர்சனம் என்பது ஆத்ம ஞானிக்குத் தானாகவே இயற்கையாக வருகிறது. ஆத்ம ஞானி செய்யக்கூடி யதை மற்றவர்கள் செய்ய முடியாது; ஆத்ம ஞானி எதையும் சாப்பிடலாம்; கங்கையில் குளிப்பது போலவே கவலை எதுவுமின்றி ஒரு சாக்கடை நீரில் அவன் ஸ்நானம் செய்யலாம். தண்ணீரைக் குடிப்பதைப் போலவே உருக்கிய இரும்பையும் அவன் சுலபமாக உட்கொள்ளலாம். மற்றவர்கள் அவ்விதம் செய்யமுடி யாது. ஆகையால் உத்தம புருஷன்தான் சமதர்சனம் கொள்ள முடியும்.

காமக்குரோதம் மேலிட்டு சம்சாரத்தில் உழல் பவர்கள், சுக துக்கங்களில் அழுந்தியவர்கள் செய்கையில் அத்வைத பாவத்தை அடைய முடியாது. அவ்விதம் செய்தால் முடிவில் அனர்த்தம்தான் விளையும். கெட்ட எண்ணம்,செய்கை ஆகியவற்றை விலக்கி நல்ல விஷயங் களையே நினைத்து, நல்ல காரியங்களையே செய்து வந்தால் ஞானம் பெருகி பாவாத்வைதம் ஏற்படும்; இந்த வித்தியாச உணர்வு அகலும். ஆத்ம ஞானிகளாகப் போனால், மூவுலகிலுமுள்ள எல்லோரைப்பற்றியும், எல்லாப் பொருள்களைப்பற்றியும் அத்வைத உணர்வு ஏற்படும். ஆனால் குரு விஷயத்தில் இந்த அத்வைத பாவம் ஏற்படக்கூடாது. ஏற்பட்டால் உபதேசம் பெற வழியில்லாமல் போய்விடும்.

என்ன காரியம் செய்ய வேண்டும், என்ன காரியம் செய்யக்கூடாது என்பதை எப்படி முடிவு செய்வது?

உன் புத்தியே உனக்குப் பிரமாணமாக இருக்கட்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் முற்றிலும் புத்தியையே நம்புவதானால், ஒருவரைப்போல மற்றொருவர் நினைப்பதில்லை. ஒருவரே இப்போது நினைப்பதைப்போல மற்றொரு சமயம் நினைப்பதில்லை. இப்படி ஸ்திரமில்லாத ஒரு புத்தி நிர்ணயத்தை முக்கிய விஷயத்தில் ஆதாரமாகக் கொள்வதற்கில்லை.

மனிதன் செய்ய வேண்டிய கடமைகள் குறித்து சாஸ்திரங்கள்தான் முடிவான பிரமாணம். மனித சமூகத்தின் திரண்ட அனுவவம் எல்லாம் அடங்கியது சாஸ்திரங்கள். மனித அனுபவத்தில் அது சரி எனக் காணப்பெற்றிருக்கிறது. எவ்வளவோ தாக்குதல்களை அவை சமாளித்திருக்கின்றன. சாஸ்திரத்தில் நம்பிக்கை வைத்து நடந்தோமானால் நமக்குக் கஷ்டம் ஏற்படாது.

நமது சாஸ்திரங்களில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஆனால் களையும்கூட சேர்ந்திருக்கிறது, களையை எடுக்கவேண்டும் என்று சிலர் வாதிக்கிறார்கள். இப்படிக் களை யெடுக்கப் பார்ப்பது ஆபத்தான காரியம். எது பயிர் எது களை என்பதிலேயே இருவர் ஒரே மாதிரி நினைப்பதில்லை. ஒருவர் பயிர் என்று நினைப்பதை மற்றவர் களை யென்று நினைக்கிறார். ஆகவே களை யெடுக்கப் போய் தாறுமாறாக எல்லோரும் பயிரையே அழித்து விடக்கூடும். பிறகு மதம் என்று சொல்லக்கூடியதாக ஒன்றும் இருக்காது.

சாஸ்திரத்தைப் பின்பற்றி, அதனால் கஷ்டம் வந்தாலும் பாதகமில்லை தப்பு ஒன்றும் செய்யவில்லை என்ற மனத்தெளிவானது உண்டாகும். உள்ளம் சுத்தமாகும். சுத்தமான உள்ளத்தில் ஆண்டவன் குடியிருக்கிறார். அவர் மென்மேலும் நம்மை நல்வழியில் செலுத்துகிறார்.

# சுகாதாரம்

சுத்தத்திற்கு வறுமை தடையில்லை

**நா**ன் எப்பொழுதும் சுத்தத்தையும் சுகாதாரத்தை யும் விரும்புகிறவன். ஐம்பது வருஷ காலமாகவே மேனுட்டைப்பற்றிக் குறைவாகப் பேசிவந்திருக்கிறேன். ஆதலால் நான் பிரிட்டிஷாரிடமிருந்து சுத்தத்துக்கு வேண்டிய விதிகளைக் கற்றுக்கொண்டேன் என்று கூறு வதற்கு இப்பொழுது வாய்ப்புக் கிடைத்தது குறித்து மகிழ்கிறேன்.

நவகாளி ஜில்லாவில் குடிப்பதற்கும் சுத்தம் செய் வதற்கும் ஒரே குளத்தை உபயோகிப்பதைப் பார்க்க எனக்கு வேதனையாக இருக்கிறது. ஜனங்கள் கண்ட இடங்களில் எச்சிலை உமிழ்ந்து தெருக்களையும் பாதை களையும் அசுத்தப்படுத்துகிறார்கள். இந்தியாவில் காணப் படும் பல நோய்களுக்கு இதுதான் காரணம். இடை விடாது பற்றி நிற்கும் வறுமையும் காரணந்தான்.

ஆனால் அதைக்கொண்டு அசுத்தப்படுத்துவதை அலட்சியமாக எண்ண முடியாது. இந்த நிலையில் இந்தி யாவில் ஜனங்கள் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள் என்பதே ஓர் ஆச்சரியமான விஷயம்தான். ஆனால் உயிரோடு இருப்பவர்களை உயிருள்ள பிணங்கள் என்றே சொல்லவேண்டும்.

ஜனங்கள் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாகச் சுகாதார விதிகளை அனுஷ்டிக்கிறார்களோ அவ்வளவுக்

கவ்வளவு அவர்களுக்கு நல்லதாகும். சுகாதார விதிகளை அனுஷ்டிப்பதற்கு வறுமை எவ்விதத் தடையுமாகாது.

—காந்தியடிகள்

பத்து விதிகள்

சுகமாய் வாழ்வதற்குரிய பத்து விதிகள் வருமாறு:—

1. உணவைக் குறை; அதிகமாய்க் கடித்துண்.
2. சவாரியைக் குறை; அதிகமாய் நட.
3. உடையைக் குறை; அதிகமாய்க் குளி.
4. கவலையைக் குறை; அதிகமாய் வேலை செய்.
5. சோம்பலைக் குறை; அதிகமாய் விளையாடு.
6. பேசுவதைக் குறை; அதிகமாய்ச் சிந்தி.
7. திரிவதைக் குறை; அதிகமாய்த் தூங்கு.
8. வீண் செலவைக் குறை; அதிகமாய்த் தானம் செய்.
9. திட்டுவதைக் குறை; அதிகமாய்ச் சிரி.
10. உபதேசத்தைக் குறை; அனுஷ்டானத்தை அதிகரி

தருப்பையின் குணம்

நோடம் சிறியவிடம் சோராக் கபம்பெருக்கஞ்
சாடும் சகல சுரம் தாகமிவை—யோடும்
அரிப்பு மகலும் அடல்வேள்வி கட்காந்
தருப்பை யெனும் புல்லுக்குத் தான்.

—குணபாடம்

அதாவது, தருப்பைப் புல்லை முறைப்படி கஷாய மிட்டுக் குடித்தால், சகலவித தோடங்கள், சிறிய விடங்கள், மிஞ்சின கபம், சகலவித சுரங்கள், தாகம், நமைச்சல் ஆகிய நோய்கள் தீரும்.

கீல் வாதம்

கீல்வாதம், முடக்குவாதம் முதலிய நோய்களைக் குணப்படுத்த, பிரிட்டனிலுள்ள எம்பயர் ருமாடிஸம்

கௌன்சிலைச் சேர்ந்த டாக்டர்கள் ஆராய்ச்சியிலீடுபட்டிருக்கிறார்கள். ஷெபீல்டு சோதனைக் கூடத்தில் தயாரித்துள்ள ஒரு மருந்தினால் சிறந்த பயன் கிடைக்கக் கூடும் என்று, அவர்களுடைய ஆண்டறிக்கையில், கௌன்சிலின் தலைவர் டாக்டர் கோப்மென் குறிப்பிட்டு இருக்கிறார். பிரிட்டனில், ஒன்பது வைத்திய நிலையங்களில், இந்த மருந்தை உபயோகிக்க, மூன்றாண்டுத் திட்டம் உண்டு. மூன்றாண்டுகளில் கிடைக்கும் அனுபவங்களைக் கொண்டு, அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்படும். மேற்கு லண்டன் வைத்திய சாலையில், இந்த மருந்தை உபயோகித்து நல்ல பலன் பெற்றிருப்பதாக அவர் கூறுகிறார்.

கண்நோய்

டிரகோமா என்ற கண்நோயை குணப்படுத்திவிட முடியுமென்று, லண்டன் லிஸர் இன்ஸ்டிட்யூட்டைச் சேர்ந்த டாக்டர் வெஸ்லி கோலியர் கூறுகிறார். இந்நோய் ஒருவித தொற்றுநீரால் பரவுகிறது. நோய்முற்றி, கண் குருடாவதுமுண்டு. மேற்கு-கிழக்கு ஆப்பிரிக்காக்களில் இந்த நோயால் வருந்துவோர் எண்ணிக்கை அதிகம். உலகில், சுமார் நாற்பது கோடி மக்கள் இந்த நோயால் துன்புறுகிறார்கள்.

டாக்டர் கோலியர், இரண்டாண்டுகளுக்கு முன்பு, இந்த நோயைப் பற்றி ஆராய முற்பட்டார். சோதனைக் கூடத்தில், இந்தத் தொற்றுநீரை உண்டாக்கி, அதன் விளைவுகளை ஆராய்ந்தார். நோயைக் கட்டுப்படுத்தக் கூடிய பூஞ்சண இயல்மருந்து ஒன்றையும் கண்டுபிடித்திருக்கிறார். இந்த மருந்தை அபிவிருத்தி செய்து, சிறந்ததோர் சீம்பால் மருந்தைத் தயாரிக்கமுடியும்.

தலைவலி

ஜார்ஜ் பெர்னார்டு ஷாவுக்கு அடிக்கடி தலைவலி ஏற்படுவது வழக்கமாக இருந்தது.

வடதுருவத்தைக் கண்டுபிடித்த நான்சென் என்பவரைப் பெர்னார்டு ஷாவுக்கு ஒரு நாள் அறிமுகப்படுத்தினார்கள்.

பெர்னார்டு ஷா:- தலைவலியைப் போக்க ஏதாவது மருந்து கண்டுபிடித்தீர்களா?

நான்சென்:- (ஆச்சரியத்துடன்) இல்லை.

பெர்னார்டு ஷா:- அம்மாதிரி மருந்து கண்டுபிடிக்க ஏதாவது முயற்சி செய்தீர்களா?

நான்சென்:- இல்லை.

பெர்னார்டு ஷா:- என்ன ஆச்சரியம்!வடதுருவத்தைக் கண்டுபிடிக்க உங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தீர்கள். அதை உலகத்தில் உள்ள மக்கள் ஒரு சல்லிக்குக்கூட மதிக்க மாட்டார்கள். உலகில் வாழுகிற மக்கள் சமுதாயம் முழுமையும் ஏங்கிக் கொண்டிருக்கிற தலைவலி மருந்தைக் கண்டுபிடிக்க நீங்கள் முயற்சி செய்யவே இல்லை.

க்யூ முறை

பிரெஞ் ஆசிரியர் க்யூ என்பவர் தன்னுடைய மனத்திற்குத்தானே யோசனைகூறி அதன்மூலம் நோய்களைக் குணப்படுத்தும் முறையைப் போதித்து வந்தார்.

"எவ்வகையிலும் நான் தினந்தோறும் அதிகமாக நலமடைந்து வருகிறேன்" என்று போதுமான அளவு நம்பிக்கையுடன் திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டு

வருவோமானுல் நம்முடைய உடம்பிற்கு நலன் உண்டாவது திண்ணம் என்று அவர் கூறினர்.

ஆரோக்கியக் கல்வி

நோயைக் குணப்படுத்தும் சக்தி மருந்திட மில்லே; இயற்கையினிடந்தானிருக்கிறது என்பதை வைத்தியர் ஜனங்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

சுத்தமான காற்று, சூரிய வெளிச்சம், ஓய்வு, நல்ல உணவு, அளவாக உண்ணல், நீர் உபயோகம், தெய்வ சக்தியிடம் நம்பிக்கை - இவையே உண்மையான மருந்துகள்.

புகையிலேயும் மதுவும் உடம்புக்கும் ஆன்மாவுக்கும் தீமையை உண்டாக்கும்.

சுத்தமான நீர் கடவுளுடைய அருட் பிரசாதங்களில் ஒன்ருகும். நீரை அதிகமாகக் குடிக்க வேண்டும். அது ரத்த ஓட்டத்தை ஒழுங்கு செய்யும். குளிர்ந்த நீரில் குளிப்பது பலந் தரும். சூடான நீரில் குளிப்பது மயிர்க் கால்களேத் திறந்து அசுத்தங்களே வெளிப்படுத்தும்.

தேகப்பயிற்சி இல்லாதிருப்பது நோய்க்கு ஒரு முக்கிய காரணம்.

மனத்திஞல் உடம்புக்கு உண்டாகும் நன்மை தீமைகளேயும் மறந்து விடலாகாது. வீரம், நம்பிக்கை, அனுதாபம், அன்பு இவை ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளேயும் தருகின்றன.

—'குணப் படுத்தும் சேவை'
என்ற நூலிலிருந்து.

# வராஹ நதித் திட்டம்

டி. கே. பார்த்தசாரதி

வராஹ நதிமீது விடூர் அணை கட்டும் திட்டம் சமீபத்தில் ஆரம்பமாயிற்று. இத் திட்டத்தின் மூலம் தென் ஆர்க்காடு ஜில்லாவுக்கும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களுக்கும் பலன் கிடைக்கும். மூன்று வருஷகாலத்தில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிற இந்தத் திட்டமானது, அந் நதியிலிருந்து நேரடியாகப் பாசன வசதியளித்து இன்னும் அதிக அளவில் ஆயக்கட்டுப் பிரதேசங்களைச் செழிக்க செய்ய உதவும். அத்துடன், வழியில் உள்ள மாணவாரிக் குளங்கள் பலவற்றுக்கும் தண்ணீர் கிடைக்கும்படி செய்யும். இதன் மூலம் ஆண்டுதோறும் சுமார் எட்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள 1400 டன் உணவுப்பொருள் அதிகமாய் உற்பத்தியாகும்.

தென் ஆர்க்காடு ஜில்லாவில் அதன் விஸ்தீரணத்துக்கும், ஜனத்தொகைக்கும் பொருத்தமான அளவில் எந்தப் பெரிய பாசனத் திட்டமும் இல்லை. அந்த ஜில்லா வழியாகப் பொன்னியாறு வெள்ளாறு ஆகிய இரண்டும் பாய்ந்தபோதிலும்கூட, அப்பிரதேசத்தில் நீர்த்தேக்க ஏற்பாடு எதுவும் செய்யப்பெறவில்லை. ஆனால், சில இடங்களில் அணைக்கட்டுகள் மூலம் ஆற்று வெள்ளம் திருப்பி விடப்படுகிறது. இதைத் தவிர, இந்தப் பிரதேசம் பெரும்பாலும் மாணவாரிக் குளங்களையே பாசன வசதிக்காக

எதிர்பார்த்து நிற்கிறது. அடிக்கடி வரட்சி ஏற்படுவதாலும், நிச்சயமான தண்ணீர் வசதி இல்லாததாலும் திண்டிவனம் தாலுக்கா, அதன் அக்கம் பக்கத்திலுள்ள தாலுக்காக்கள் ஆகியவற்றில் சாகுபடிப் பிரதேசங்களின் உற்பத்திச் சக்தி வெகுவாகக் குறைந்துவிடுகிறது.

நதி பாயும் பிரதேசம்

வராஹ நதி தென் ஆர்க்காடு ஜில்லாவில் செஞ்சி தாலுக்கா எல்லையில் மேற்கு ஓரமாக உள்ள பிரதேசத்திலிருந்து உற்பத்தியாகிறது. அது செஞ்சி, திண்டிவனம், விழுப்புரம் தாலுக்காக்கள் வழியாகக் கிழக்கு முகமாய் ஒடி வங்காளக் குடாக்கடலில் கலக்கிறது. அதன் கீழ்ப் பகுதியில் தொண்டியாறும்,பாம்பாறும் அதில் சேருகின்றன. தொண்டியாறு விடூர் அணை ஸ்தலத்துக்கு மேலேயும், பாம்பாறு அதற்குக் கீழேயும் சேருகின்றன. மொத்தம் நாற்பத்தொன்பது மைல் நீளமுள்ள இந்த ஆற்றுக்கு ஐந்நூறு சதுர மைல் பரப்புள்ள நீர்ப் பிடிப்புப் பிரதேசம் இருக்கிறது; அங்கே சராசரி மழை அளவு ஆண்டொன்றுக்கு நாற்பத்தைந்து அங்குலம். செஞ்சித் தாலுக்கா அனேகமாய் இந்த நதிப் பிரதேசத்தில் முழுக்க அடங்கியிருக்கிறது. போளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், திண்டிவனம் தாலுக்காக்களும், அவற்றிலுள்ள ஏராளமான மானாவாரிக் குளங்களும் நதிப் பிரதேசத்திலேயே இருக்கின்றன.

வராஹ நதி தொண்டியாற்றுடன் சேருகிற இடத்துக்கு மேலே மொத்தம் எட்டு அணைக்கட்டுகள் (வியர்ஸ்) அந்நதிக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ளன; தொண்டியாற்றில் ஆறு அணைக்கட்டுகளும், வராஹ நதியில் பாம்பாறு சேருவதற்கு இடையில், தொண்டியாறும் வராஹ நதியும் சேர்ந்து பாயும் பகுதியில் இரண்டு அணைக்கட்டுகளும்

இருக்கின்றன. கடைசி இரண்டு அணைக்கட்டுகளான சுத்தகேணி, பிள்ளையார்குப்பம் அணைக்கட்டுகள் புதுச்சேரி எல்லைக்குள் இருக்கின்றன. இவை எல்லாம் அடங்கலாக வராஹ நதி சுமார் பத்தாயிரம் ஏக்கராவுக்குப் பாசன வசதியளிக்கும்.

சுமார் அரை நூற்றுண்டுக்கு முன் ஒரு பிரெஞ்சு எஞ்சினீயர் ஏற்கெனவே தொண்டியாற்றின் மீது கட்டப்பட்டிருந்த விடூர் அணைக்கட்டைத் திருத்தி யமைத்து, அதன் இடது கரையிலிருந்து தண்ணீர் வாய்க்கால் ஒன்றைப் பிரித்து அமைத்து இந்திய யூனியன் பிரதேசத்திலும் அப்போதைய பிரெஞ்சு இந்திய ஆட்சிப் பிரதேசத்திலும் உள்ள சில மானுவரிக் குளங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சலாம் என்று யோசனை கூறியிருந்தார். 1948-ஆம் ஆண்டில் இப்பிரச்னை மேற்கொள்ளப்பெற்று அதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டனர்.

### திட்ட விவரங்கள்

விடூர் அணைக்கட்டுத் திட்டத்துக்கு அறுபத்தேழு லட்சம் ரூபாய் செலவாகலாம். இத்திட்டம் வராஹ நதிக்குக் குறுக்கே, திண்டிவனம் தாலுக்கா விடூர் கிராமத்துக்கு அரை மைல் மேற்கே, நீர்த் தேக்கம் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்கிறது. நதிப் படுகையிலிருந்து நாற்பத்திரண்டு அடி உயரமுள்ள அணை கட்டப்படும். அதில் நானூற்றைம்பது அடி நீளத்துக்குக் கட்டுமான அணை இருக்கும், அதில் 396 அடி நீளத்துக்கு வாய்ப் பகுதி இருக்கும். அதற்குப் பக்கவாட்டாக 6,201 அடி நீளத்துக்கு இடது புறத்திலும் 12,887 அடி நீளத்துக்கு வலதுபுறத்திலும், மண் அணை இருக்கும்.

விடூர் தேக்கத்தில் ஐம்பத்தைந்து கோடி கன அடி தண்ணீர் தேங்கி நிற்கலாம். தண்ணீர் மறிந்து பாய்கிற வாய்ப்பகுதி தவிர, அணையிலேயே 5'X6' மதகு ஒன்று இருக்கும்; தேக்கத்திலுள்ள தண்ணீரைப் பிரதான நதியில் பாயவிட்டு நிச்சயமான பாசன வசதிக்கு ஏற்பாடு செய்ய அது வழி செய்யும்.

புதிதாகப் பாசன வசதி பெறப்போகிற ஆயக்கட்டுப் பிரதேசம் ஆற்றின் இடது கரையோரமாகவே இருக்கும். இடதுபுற மண் அணையிலிருந்து 6.5'X3' அளவுள்ள மதகு மூலம் ஆயக்கட்டுப் பிரதேசத்துக்குத் தண்ணீர் பாயும். மேலும், விடூர் குளத்துக்குத் தண்ணீர் பாய்வதற்காக மண் அணையில் 6'X3. 5' மதகு ஒன்றும் இருக்கும். தற்போது அந்தக் குளத்துக்கு விடூர் அணைக்கட்டிலிருந்து ஒரு வாய்க்கால் வருகிறது. இனிமேல் அந்த வாய்க்கால் புதிய தேக்கத்தில் அமிழ்ந்துவிடும்.

புதிய கால்வாயின் மொத்த நீளம் பதினொரு மைலுக்கும் அதிகமாக இருக்கும். அதில் சுமார் முக்கால் மைல் தூரம் புதுச்சேரி எல்லையில் இருக்கும். கால்வாய் மூலம் மொத்தம் மூவாயிரத்து இருநூறு ஏக்கரா ஆயக்கட்டுப் பிரதேசத்துக்குத் தண்ணீர் கிடைக்கும். இத்திட்டங்களின்படி புதிதாகப் பாசன வசதி பெறுகிற பிரதேசத்தில் குறுகியகால நன்செய்ப் பயிர்கள்தான் விளைவிக்கப் பெறும்.

செலவும் பலனும்

இத்திட்டத்துக்காகும் செலவைச் சென்னை, புதுச்சேரி ராஜ்யங்கள் 69-31 விகிதப்படி ஏற்கும். இத்திட்டத்தின் பலனாய் 1,420 டன் அரிசி விளையும்; அதன் விலை மதிப்பு சுமார் எட்டு லட்சம் ரூபாய். இத்திட்டம் அடுத்த மூன்று வருஷங்களில் பூர்த்தியாகும்.

விடூர் தேக்கத்தில் தண்ணீர் பரவி நிற்பதால் முக்கிய மான எந்த நகரமோ அல்லது இடமோ பாதிக்கப்பட மாட்டாது. 140 ஏக்கரா நன்செய் நிலமும், 1400 ஏக்கரா புன்செய் நிலமும், சில புறம்போக்கு நிலமும் தான் நீரில் அமிழும். இதனுல் ராஜ்ய சர்க்காருக்கு வரி நஷ்டம் ஆண்டொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய். ஆனுல், புதிய பாசனம் மூலம் கிடைக்கிற வரி வருமானம் இருபதாயிரம் ரூபாய். இத் தேக்கத்தால் பலன்பெறுகிற பிரதேசம் தற்போது அவ்வளவாக அபிவிருத்தியடையாத நிலையில் இருக்கிறது. எனவே இத்திட்டம் அதன் பொருளா தாரத் தரத்தைக் கணிசமாக மேம்படுத்த உதவும்; நிலம், நீர், ஆள்பலம் முதலியவற்றை இன்னும் நல்ல அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ள இத் திட்டம் வழி செய்யும்.

# மலேரியா ஒழிப்பு

பி. அனந்தஸ்வாமி ராவ்

மலேரியா இந்தியாவின் மிக முக்கியமான சுகாதாரப் பிரச்னையாக இருந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் ஏழரைக் கோடிப் பேர் அதனால் மரணமடைவதாக ஐந்தாண்டுகளுக்குமுன் மதிப்பிடப்பெற்றது. இவ்வாறு மரண விகிதம் அதிகமாக இருப்பதோடுகூட, அந்நோய் பிடித்த மக்களுக்குக் கஷ்டமும், அதனால் நஷ்டமும் பெருமளவில் ஏற்பட்டுவருகின்றன. மலேரியாக கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக வருஷந்தோறும் ஒன்றரைக் கோடி ரூபாய் செலவாகிறது; சுமார் மூன்று கோடி மக்கள் பாதுகாப்புப்பெறுகிறார்கள். மலேரியாப் பிரதேசங்களிலுள்ள மக்கள் தொகை இருபது கோடி.

மலேரியாவின் தீய விளைவுகளைப் பண ரூபமாகக் கணகிடுவது சாத்திய மில்லையாயினும், தனிப்பட்டவருக்கும் குடும்பத்துக்கும் ஏற்படுகிற பண நஷ்டம் மாத்திரம் ஆயிரம் கோடி ரூபாய்க்குக் குறையாது. அது தவிர, தேச மக்களின் உழைப்புச் சக்தியும் பாதிக்கப்படுகிறது.

இத்தகைய ஒரு சூழ் நிலையில்தான் இந்திய அரசாங்கத்தார் சுகாதாரப் பரிசீலனை-அபிவிருத்திக் கமிட்டி தேசம் முழுவதிலும் வேலை செய்கிற மலேரியா தடைஸ்தாபனத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்று சிபாரிசு செய்தனர்.

தேசீய மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டம்

திட்டக் கமிஷன் இது பற்றிப் பரிசீலித்தபோது தேசீய மலேரியா கட்டுப்பாட்டுத்திட்டத்துக்கு முதன்மை ஸ்தானம் அளித்தது. அந்தத் திட்டம் முதலாவது ஐந்தாண்டுத் திட்ட சுகாதார அபிவிருத்தி ஏற்பாடுகளில் ஓர் அங்கமாக அமுலுக்கு வந்தது. அந்தக் கட்டுப் பாட்டுத் திட்டத்தின் நோக்கம் மலேரியா தொற்றுப் பரவுகிற அளவை குறைந்த மட்டத்துக்குக் கொண்டு வந்து அது பொது சுகாதாரப் பிரச்னையாக இருக்கும் நிலையை அகற்றுவதுதான். முதலில் பன்னிரண்டுகோடி பேருக்குப் பாதுகாப்பு அளிக்க உத்தேசிக்கப்பெற்றது. முதல் திட்டத்தின் கடைசி மூன்று வருஷத்தில் 15 கோடி ரூபாய் செலவாகுமென்று மதிப்பிட்டனர். அதில் பெரும் பகுதி டி. டி. ட்டி., போக்குவரத்து வசதி, மருந்து தெளிப்புச் சாதனங்கள் முதலியவை அமெரிக்க தொழில் நுட்ப கூட்டுறவு ஸ்தாபனத்தால் அளிக்கப்படவேண்டு மென்று ஏற்பாடு செய்தனர். இந்திய அரசாங்கத்தார், பயிற்சி வசதி, இணைப்பு வேலை,மலேரியா தடை மருந்து கள் முதலியவற்றையும், ராஜ்ய அரசாங்கங்கள் வேலைச் செலவையும் தரவேண்டுமென்பது திட்டம். முதல் திட்ட காலத்தில் பதினொரு கோடி முப்பத்தாறு லட்சம் ரூபாய் செலவாயிற்று.

பாதி குறைவு

முதல் வருஷக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் பலனாய் மலேரியா கண்டவர்களின் எண்ணிக்கை பாதி யாகக் குறைந்தது. சமூகப் பொருளாதார மாறுதல்கள் பற்றிய பரிசீலனைகள் நடத்தப்பெற்றன. மைசூரில் நடத்தப்பெற்ற முன்னோட்டப் பரிசீலனையிலிருந்து மலேரியாக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்காக ஒரு ரூபாய்

செலவிட்டால் 97 ரூபாய் மதிப்புள்ள பிரதிப்பலன் கிடைக்கும் என்று தெரிய வந்தது. மேலும், இந்தத் திட்டத்தின் பலனாய் தொழிலாளர்களுக்கு உடல் நலம் சரியாகி நெல் மாசூல் அதிகரித்து இருபது லட்சம் ரூபாய் லாபமும் கிடைத்ததாகத் தெரிய வந்தது. இதேபோல், உத்தரப் பிரதேசத்தில் விவசாய உற்பத்தியும், நிலக்கரிப் பிரதேசங்களில் நிலக்கரி உற்பத்தியும் தென் கன்னடத்தில் பாக்கு உற்பத்தியும் அபிவிருத்தி யடைந்தன.

இரு முக்கிய அம்சங்கள்

தேசத்திலுள்ள மலேரியாப் பிரதேசங்களில் பெருமளவில் கட்டுப்பாட்டு நடவடிக்கை எடுத்ததிலிருந்து இரு முக்கிய அம்சங்கள் கவனத்துக்கு வந்திருக்கின்றன. குறைந்தபட்சம் மூன்று வருஷம் பூச்சிநாச மருந்து தெளித்து வந்து பாதுகாப்பு அளித்து வந்தால், மனித உடலில் மலேரியா அறவே ஒழிந்துவிடுகிறது; அதனால் பிறகு மருந்து தெளிக்கும் வேலையை நடத்த அவசியம் இல்லாமற்போகிறது. இரண்டாவது அம்சம், மலேரியாத் தொற்றைக் கடத்துகிற கொசுக்களுக்கு மருந்து எதிர்ப்புச் சக்தி ஏற்படுகிறதென்று தெரிய வந்ததாகும்.

முதல் அம்சம் காரணமாய் மலேரியாவை ஒழித்துவிடலாமென்று நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் இரண்டாவது அம்சம் காரணமாய் இந்த நடவடிக்கைகளைத் துரிதமாகச் செய்யவேண்டுமென்ற அவசர நிலை ஏற்பட்டது. வியாதி திரும்பவும் தலை காட்டினால் அளவற்ற கஷ்டம் ஏற்படும். இந்த அம்சங்களைக் கவனித்தும், மலேரியா ஒழிப்பு திட்டத்துக்கு ஆகும் செலவைவிட நாளடைவில் குறைவாக இருக்குமென்பதைக் கவனித்தும், இந்திய அரசாங்கத்தார் தேசீய மலேரியா கட்டுப்

பாட்டுத் திட்டத்தை மலேரியா ஒழிப்புத் திட்டமாக மாற்றத் தீர்மானித்தார்கள்.

மலேரியா ஒழிப்புத் திட்டம்

மலேரியா ஒழிப்புத் திட்டம் ஒரு வியாதி ஒழிப்புத் திட்டமாகும்; மக்களிடையே தொற்று ஒட்டுண்ணியைக் கணிசமாகக் குறைத்து, ஸ்தல தொற்று பரவாமல் பார்த்துக் கொள்வதுதான் அதன் முதலாவது நோக்கம். அதற்கு தேச மக்கள் அனைவருக்குமே பாதுகாப்பு அளிக்கவேண்டும். ஏனென்றால், உஷ்ண மண்டலப் பிரதேசத்தில் எந்த ஒரு பிரதேசத்தையும் முழுக்கத் தொற்றில்லாத பிரதேசமென்று சொல்லமுடியாது. எனவே, சுமார் 39 கோடிப் பேருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். திட்டம் இரு கட்டமாக நடக்கும்: ஒன்று, தாக்குதல் கட்டம்; இரண்டாவது மேற்பார்வைக் கட்டம்.

தாக்குதல் கட்டம்: முதல் கட்டம் வருஷத்துக்கு இரு முறை ஒவ்வொரு வீட்டிலும், கால்நடைக் கொட்டில்களிலும் மருந்து தெளித்துப் பாதுகாப்பதுதான். மலேரியாப் பிரதேசங்களில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப் படும். 20 கோடிப் பேர் அங்கே வசிக்கிறார்கள். 200 நிலையங்கள் அங்கே வேலை செய்யும். ஒவ்வொரு நிலையமும் 10 லட்சம் பேருக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். இத்தகைய தீவிர மருந்து தெளிப்பு வேலை மூன்று வருஷம் தொடர்ச்சியாய் நடக்கும். மலேரியாத் தொற்று லேசாக உள்ள இதர இடங்களிலும் சுமார் பத்தொன்பது கோடிப் பேருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும். வியாதியைக் குறைப்பதற்காக அந்தப் பிரதேசங்களும் இரண்டு வருஷ காலம் மருந்துத் தெளிப்புப் பிரதேசங்களாக்கப்படும். அதற்கென அதிகப்படியாய் 190 நிலையங்கள் ஏற்படும்.

ஒரு தடவை மருந்து தெளித்தாலே போதுமென்று தெரிய வருகிறது. இவ்வாறு தேசம் முழுவதும்-இயற்கை யாக மலேரியா உள்ள தெரிந்த சில பகுதிகள் தவிர-இத் திட்டத்தில் வந்த பின்தான் சில நிபந்தனைகளுக்குட் பட்டு மருந்து தெளிப்பு வேலை கைவிடப்படும்.

மண்ணீரல் நிலை, ஒட்டுண்ணி நிலை, குஞ்சு ஒட் டுண்ணி நிலை முதலியவை திருப்திகரமாய் இருப்பதாய் இரு வருஷங்களிலும் தெரிய வந்தபின் மருந்து தெளிப்பு கைவிடப்பட்டு மேற்பார்வைக் கட்டம் ஆரம்பிக்கும்.

மேற்பார்வை கட்டம்: மருந்து தெளிப்பு நிறுத்தப்படுகிற பிரதேசத்தில் மீண்டும் வியாதித்தொற்று ஏற்படுகிறதா என்று விழிப்பாகக் கண்காணித்துவரப்படும். அதற்காக விசேஷச் சிப்பந்திகள் வீடு வீடாய்ச் சென்று விசாரித்து வருவார்கள். கண்காணிப்புச் சிப்பந்திகள் மருந்து தெளிப்பு கைவிடப்படுவதற்கு ஒரு வருஷம் முன்ன தாகவே வேலை துவங்குவார்கள். அவர்கள் சேகரிக்கும் தகவல்கள் மருந்து தெளிப்பைக் கைவிடவேண்டுமா, வேண்டாமா என்பதை நிர்ணயிக்க உதவும். அது கை விடப்பட்டாலும் மேலும் மூன்று வருஷத்துக்குச் சிப்பந்தி கள் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள். அதற்குப் பிறகு, ஸ்தல அதிகாரிகள் அப்பொறுப்பை ஏற்பார்கள். எனவே மலேரியா ஒழிப்புத் திட்டம் ஆறு வருஷ காலம் நீடிக்கும். அதன் பின் பராமரிப்புக் கட்டம் ஆரம்பிக்கும்.

மலேரியா ஒழிப்புத் திட்டத்துக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், அடுத்த திட்ட காலத் திலும் சுமார் 63 கோடி ரூபாய் செலவாகும். கட்டுப் பாட்டுத் திட்டம் அமுல் ஆனால், பராமரிப்புக்காக 24 கோடி ரூபாய் மீண்டும் மீண்டும் நீண்ட காலத்துக்குச் செலவிடவேண்டும்.

கொசுக்கள் ஒழிந்துவிட மாட்டா

மலேரியா ஒழிப்புச் சம்பந்தமாய் ஒரு விஷயத்தை இங்கே தெளிவு படுத்துவது நல்லது. இத்திட்டம் கொசுக்களை ஒழிக்கும் திட்டமல்ல. மலேரியா முற்றிலும் ஒழிந்த பிறகும்கூட கொசுக்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால், அவை மலேரியாத் தொற்றைக் கடத்தும் பிராணிகளாக இருக்கமாட்டா.

இப்போது மலேரியாவை முற்றிலும் ஒழிக்காவிட்டாலும் மடக்கிவிட்டோம். மரண விகிதம் 1947 இறுதியில் இருந்ததைவிடக் கால்வாசிக்கும் குறைவுதான். மக்கள் உழைப்புச் சக்தியும், அதனால் உற்பத்தியும் பெருகியுள்ளன. இறுதி வெற்றி நமதே.

# வான விதியிலே

எஸ். ஸ்ரீநிவாசன்

ஓர் இருண்ட இரவிலே தெளிந்த வானத்தைக் கண்டு நீங்கள் களித்ததுண்டா? இல்லையேல் இன்றிரவே காணுங்கள். பால் நிலவு இல்லாத இரவாக இருந்தால் மிக்க நலம். பரந்த கடற்கரை மணலோ, ஆற்று மணலோ அருகில் இருந்து அதில் படுத்தவாறே எல்லையற்ற வான வெளியைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்குமேயானுல் அதனை விடச் சிறந்த பாக்கியம் வேறென்றில்லை. உங்கள் மனத்தோடு ஒன்றிய நண்பன் ஒருவனுடன் உங்கள் மனத்தைத் திறந்து உரையாடும் உவகையை அடைவீர்கள் என்பது திண்ணம்.

அவ்வாறு உவகை அளிக்கக் கூடிய பொருள்கள் தாம் என்ன? மின்னி மின்னிப் பல நிறங்களில் சுடரை அள்ளி வீசும் நட்சத்திரங்களும், மின்னுமல் மங்கலாகவோ, பிரகாசமாகவோ ஒளிரும் கோள்களும் (Planets) வான வீதிக்கு வெள்ளைப்பட்டை அடித்தாற் போலும், அகன்ற நெற்றியில் விபூதிப் பூச்சுப்பூசி அதன் நடு நடுவே சந்தணப் பொட்டு இட்டாற் போலுமிருக்கும் பால் வீதியில்(The Milkyway) நமது உள்ளம் கவர்வனவாக அமைந்திருக்கின்றன. இடை, இடையே சிறிய வாணவேடிக்கையையும் காணலாம். மத்தாப்பு வண்ணங்களோடு ஒருசுடர் கடுவேகமாக வானவெளியின் குறுக்கே சென்று மறையும். இதை விண் எரி சுடர் (Meteors) என்பர். இவை நீங்கலாக சில ஆண்டுகளுக்கு ஒரு

தடவை வேறொரு புதிய உருவம் தோன்றிச் சில நாட்களுக்கோ, சில மாதங்களுக்கோ, வான வீதியில் ஆட்சி செலுத்தி விட்டு, தனது பாகம் முடிந்தவுடனே நாடக அரங்கை விட்டு மறையும் நடிகன் போல மறைந்து போவதுமுண்டு. இவற்றை தூமகோது என்பர். தவிரவும் வான வெளியிலே மங்கலான புகைக் கூட்டங்கள் சிலவும் தோன்றலாம். இவற்றை "நெபுலா" என்பர். எண்ணிக்கையிலடங்காத, இத்துணை வானவெளி வாசிகளைக் கண்டு மனிதன் ஐயமும், ஆச்சரியமும் அடைவதில் ஆச்சரியமில்லை. அவை ஒவ்வொன்றையும் பற்றி இப்பொழுது ஆராய்வோம்.

நட்சத்திரங்கள்:– சுமார் நூறுகோடி நட்சத்திரங்கள் இருக்கலாமென்று நம்பப்படுகிறது. அவை இருக்கும் தூரத்தைப் பார்க்கும்போது நமது சிந்தை சுழலுகிறது. அவற்றினுடைய இரகசியத்தைச் சிந்திக்கச் சிந்திக்க உள்ளக் கிளர்ச்சி உண்டாகிறது. நாம் வசிக்கும் பூமியும் ஒரு நட்சத்திரமான சூரியனுடைய துணைக் கோளே (Satellite).

வடகோளார்த்தத்தில் சுமார் 2500 நட்சத்திரங்களும் மொத்தத்தில் 4,400 நட்சத்திரங்களும் நாம் காணக்கூடியவை. நமது சூரியனைப் போன்றவையே நட்சத்திரங்கள். பத்துக்கோடி நட்சத்திரங்களை இன்று புகைப் படத்தில் பிடிக்கலாம். கதையின் முடிவு இதுவல்ல. நமது கிரக மண்டலத்தைப்போல எண்ணற்ற மண்டலங்கள் வெகு தொலைவில் உள்ளன. மிக்க அருகிலிருக்கும் நட்சத்திரத்திலிருந்து புறப்படும் ஒளி பூமியை அடைய நான்கு வருஷங்கள் ஆகின்றன. ஆனால் சூரியனிடமிருந்து ஒளி பூமியை அடையவோ ஏழெட்டு நிமிஷங்களே ஆகின்றன. சில நட்சத்திரங்களின் ஒளி கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே புறப்பட்டிருக்க வேண்டும்.

நட்சத்திரங்கள் இருக்கும் தூரத்தை எவ்வாறு கணக்கிடுகின்றனர்? தொலை நோக்கி ஆடிகளும் வான சாஸ்திரமும் இதற்கு உறுதுணையாகவுள்ளன. நட்சத்திரங்களின் தோற்றத்தில் ஏற்படும் பார்வைப் பிழையைக் (Parallox) கொண்டு கணக்கிடுகின்றன. இவ்வாறு முதன் முதலாக 1838 ல் பெஸ்ஸெல் (Bessle) என்ற வான சாஸ்திரியே கணக்கிட்டார்.

வான வீதியிலே எண்ணற்ற நட்சத்திரக் கூட்டங்கள் உள்ளன. நட்சத்திரங்களின் ஊடே தூசி, வாயுக்கள் நிறைந்த மேகங்கள் உள்ளன. சில நட்சத்திரக் கொத்துக்களில் மிகப் பெரியது "பால் வீதி" யாகும். தட்டுப் போன்ற இப் பெரியதொரு பகுதியின் ஓர் விளிம்பையே நாம் காண்கின்றோம்.

நட்சத்திரங்கள் நம் பூமியைப் பற்றிய வரை நிலையானவை. சூரியனோவெனில் நிமிஷத்திற்கு இருநூறு மைல் வேகத்தில் நகர்கிறது.

நட்சத்திரங்கள், அவற்றின் பிரகாசத்தைக் கொண்டு தரப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறு முதல்தரம், இரண்டாம்தரம்,மூன்றும்தரம் என்றெல்லாம் வெவ்வேறு நட்சத்திரங்களைக் கூறுவர். நட்சத்திரங்களுக்கு அவற்றின் தோற்றத்தைக் கொண்டு வேடிக்கையான பெயர்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சந்திரன் சஞ்சரிக்கும் பாதையிலுள்ள 27 நட்சத்திரங்களும் வெவ்வேறு எண்ணிக்கையும், வெவ்வெறு தோற்றமும் உடையன. இங்ஙனம் அசுவினி, குதிரைத் தலைபோல் ஆறு நட்சத்திரங்களால் ஆனது. பரணியின் மூன்று நட்சத்திரங்களும் ஃ என்ற எழுத்துப் போல் தோன்றும் கார்த்திகையின் ஆறு நட்சத்திரங்களும் ஒரு கற்றையாக ஒரு காதணி போன்று காட்சி அளிக்கும். இம்முறையிலே இதர

நட்சத்திரங்களும் தோன்றும். இவற்றைச் சுலபமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இந் நட்சத்திரங்கள் இருக்குமிடத்தைக் கொண்டே இரவு நேரங்களில் நேரத்தைக் கணக்கிட்டு வந்தனர்.

புதிய நட்சத்திரங்களை 'நோவே' (Novae) அல்லது புதிய நட்சத்திரங்கள் என்கின்றனர். நட்சத்திரங்கள் மின்னக் காரணம் அவற்றின் ஒளிக்கிரணம் நம்மைச் சூழ்ந்திருக்கும் காற்று மண்டலத்தினுல் திசை விலகுதலால்தான். நட்சத்திரங்கள் வெண்மை, நீலம், மஞ்சள், சிவப்பு என பலவர்ணங்களை அள்ளிச் சொரிகின்றன. திருவாதிரை என்ற நட்சத்திரம் நல்ல சிவப்பு நிறமாக ஒளிர்வதை நாம் காணலாம். இந் நிறங்களுக்குக் காரணம் நட்சத்திரங்களின் அமைப்பிலுள்ள மூலகங்களும், அவற்றின் உஷ்ண நிலைமையுமே யாகும். நட்சத்திரங்களின் விட்டங்களை மைக்கோல்சன் (Michaelson) என்ற வான சாஸ்திரி கண்ட வழிப்படி கணக்கிடுவார்கள். இவ்வாறு ஓரியன் (Orion) என்ற தொகுதியிலுள்ள ஒரு நட்சத்திரத்தின் விட்டம் $250 \times 10^6$ மைல்களாகும்.

நட்சத்திரங்களைத் தீவுப் பிரபஞ்சங்கள் (Island Universe) எனக் கூறலாம். அவற்றின் பொருண்மைக்கும் சக்திக்கும் காரணம், பொருள் சிதைவுறுதல்தான். அவற்றை நினைக்கும் பொழுது மிக்க ஆச்சரியமாயிருக்கிறது எனச் சொல்லுவதைத் தவிர வேறில்லை.

பால்வீதி எண்ணற்ற நட்சத்திரங்களால் ஆனது. வெகு தொலைவிலிருந்து நோக்கும்பொழுது பனி மூடிய பட்டையாகத் தோன்றுகிறது. இதை ஆராய்ந்தவர்கள் எல்லையற்ற வானவெளி வளைந்திருக்கிறது என்றும் (இயலுமேயானுல்!) ஒருவர் வானவெளியில் பிரயாணம்

செய்து தாம் புறப்பட்ட இடத்திற்கே திரும்பவும் வர இயலும் என்றும் கூறுகின்றனர்.

கிரகங்கள்:-

கிரகங்கள் நமது பூமிக்குச் சகோதரிகள் ஆகும். அவை வான வீதியில் சுற்றித் சுற்றித் திரிகின்றன. சூரியன், பூமி, சந்திரன், புதன், சுக்கிரன், செவ்வாய், குரு, சனி, யுரேனஸ், நெப்ட்யூன், ப்ளூடோ, ஆகியவற்றையே நாம் கிரகங்கள் என்கிறோம். இந்தக் கூட்டத்துக்குச் சூரியக் குடும்பம் (Solar System) என்று பெயர். அவை சூரியனைச் சுற்றி இயங்குவதால் இப்பெயர் நன்கு பொருந்தும்.

இவற்றின் உருவத்தையும் ஒன்றுக் கொன்று எத்தனை தூரத்தில் இருக்கிறது என்பதையும் அறியச் சூரியனை 9 அடி விட்டமுள்ள பந்தாகக் கருதினால் பூமி ஓர் அங்குல விட்டமுள்ள ஒரு புள்ளியாகவும் சூரியனிடமிருந்து 330 கெஜதூரத்திலும் இருக்கும். ப்ளூடோ 14500 கெஜ தூரத்தில் இருக்கும். இதே கணக்கில் மிக்க அருகே உள்ள நட்சத்திரம் 40,000 மைலுக்கு அப்பால் இருக்கும்.

கிரகங்களுக்குச் சுயம் பிரகாசமில்லை. அவை சூரியனுடைய ஒளியைத்தான் பிரதிபலிக்கின்றன. ஆகவே நாம் கலையுணர்ச்சியோடு கண்டு ரசிக்கும் சந்திரன் சுய ஒளியை உடையதன்று. சூரியனுடைய ஒளி பட்டு ஒளியுறும்போது அது நமக்குப் பிரகாசமாகத் தெரிகிறது. அதிலிருந்து கிடைக்கும் ஒளி, பிரதிபலித்த தாகையால் தண்மையுடையதாக இருக்கிறது.

சூரியனுக்கும் பூமிக்குமிடையே யுள்ள கிரகங்களைத் தாழ்மையான கிரகங்களென்றும், அப்பால் உள்ள கிரகங்களை உயர்ந்த கிரகங்களென்றும் கூறுவர்.

கிரகங்கள் சூரியனுடைய கவர்ச்சியாலும், பரஸ்பரம் ஒன்றுக்கொன்று உள்ள கவர்ச்சியாலும் வான வீதியில் சுற்றி வருகின்றன. இவ்வாறு பூமி தன்னைச் சுற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றி வருவதால் பகல் இரவு கொண்ட நாட்களும், வருஷங்களும் உண்டாகின்றன. பூமியின் சுழற்சி, அச்சு செங்குத்திலிருந்து $23\frac{1}{2}$ டிகிரி சாய்ந்தும் எப்போதும் வடக்கு நோக்கியே இருப்பதால் காலங்கள் உண்டாகின்றன. மேலும் பூமியின் வடக்குத் தெற்குப் பாதிகளில் வெவ்வேறு காலங்களில் கோடை, மாரிக்காலங்கள் தோன்றுகின்றன. உதாரணமாக, ஜுலை மாதம் வடக்குப் பாதியில் மத்திய கோடை; ஜனவரி மாதம் மத்திய குளிர் காலம். தட்டாமாலை சுற்றிக்கொண்டே பள்ளியிலிருந்து வீடு திரும்பும் சிறுமி போலப் பூமி தானும் சுற்றிக்கொண்டு மேற்கிலிருந்து கிழக்காகச் சூரியனை வலம் வருகிறது. ஆகவே சூரியன் கிழக்கில் உதித்து, மேற்கில் மறைவதுபோலத் தோன்றுகிறது.

பூமி இவ்வாறு ஒருமுறை தன்னைச் சுற்றிக் கொள்ளுவதற்கு 24 மணி நேரம் ஆகிறது. அதையே ஒரு தினம் அல்லது நாள் என்கிறோம். இவ்வாறான $365\frac{1}{4}$ நாட்கள் கொண்டது ஒரு வருஷமாகும். பூமிக்குப் போன்று மற்றக் கிரகங்களுக்கும் நாட்கள் கணக்கிடப் பட்டிருக்கின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| செவ்வாய் | ... 4 | மணி | 37 | நிமிஷங்கள். |
| குரு | ... 9 | ” | 55 | ” |
| சனி | ... 10 | ” | 14 | ” |
| யுரேனஸ் | ... 10 | ” | 45 | ” |
| நெப்ட்யூன் | ... 16 | ” | — | |

மற்றக் கிரகங்களின் நாட்கள் கணக்கிடப்படவேண்டியிருக்கின்றன.

வீட்டிலுள்ள குழந்தைகள் ஒன்றுக் கொன்று முரண்ண குணம் உடையவையாயிருந்தால் அவற்றை நவக்கிரகங்கள் என்று கூறுவர். குழந்தைகள் குணங்கள் எப்படியிருப்பினும் நவக்கிரகங்கள் தமது உருவத்திலும், அவற்றின் உஷ்ண நிலேயிலும் இன்னும் பல விஷயங்களிலும் அதிகமான வித்தியாசம் உடையன. சிலவற்றைச் சூழ்ந்து உயிர் வாழ உறுதுணேயான காற்று மண்டலம் இருக்கலாம். நம் பூமியைச் சுற்றிஅவ்வாருன காற்று மண்டலம் இருப்பதிஞலேயே பூமியில் உயிரினம் வாழ இயலுகிறது. ஆனுல் சந்திரனில் அவ்வாறு இன்மையால் சந்திர மண்டலத்தில் உயிரினம் இல்லே. சுக்கிரன், செவ்வாய், கிரகங்களில் உயிரினம் இருப்பதற்குத் தக்க சான்றுகள் உள.

சுக்கிரன், பூமியைப் போன்று கிட்டத் தட்ட அதே உருவம் உடையதாயிருக்கிறது. செவ்வாய் பூமியில் பாதி அளவே இருக்கிறது. சனி 736 மடங்கு பெரியது. குரு மிகப் பெரியதும், மிக்கக் குளிர்ச்சியானதும் ஆகும். அதன் உஷ்ணம்—250 F (நமது உடல் உஷ்ணம் 98° F). இக்கிரகங்களில் விசித்திரமான அமைப்புக் கொண்டது சனி. அதைச்சுற்றி மூன்று வளேயங்கள் போல் தோன்றிஞலும் உண்மையில் அவை தொடர்ச்சியாக இல்லே. அவை விண் எரி சுடர்களின் மொய்த்தலேயாகும். யுரேனஸ் 1781 லும், நெப்ட்யூன் 1846 லும் ப்ளூடோ 1936 லும்தான் புதிதாகக் கண்டு பிடிக்கப் பெற்றன.

சந்திரன் பூமியினுடைய ஓர் உபகிரகம் ஆகும். அதாவது, சந்திரன் முதலில் பூமியைச் சுற்றிக் கொண்டு,

பூமியோடு சேர்ந்து சூரியனையும் சுற்றி வருகிறது. புதன் சுக்கிரன், ப்ளூடோ நீங்கலாக மற்ற கிரகங்களுக்கெல்லாம் உபகிரகங்கள் உண்டு. பூமிக்கு 1, செவ்வாய் 2, குருவிற்கு, 11 சனிக்கு 9, யுரேனஸ் 5, நெப்ட்யூன் 1 உப கிரகங்கள் உள்ளன.

கிரகங்கள் தோன்றிய வரலாறு:-

ஆவி உறைக் கொள்கை (Nebular Hypothesis) யின் மூலம் கிரகங்கள் தோன்றிய வரலாறு விளக்கப் படுகிறது. இக் கொள்கைக்கு மூல புருஷர் (Laplace-1796). இக் கொள்கைப்படி, சூரிய மண்டலம் ஒரு காலத்தில் கொதிக்கும் பெரிய உருண்டையாயிருந்தது. நாளடைவிலே அது குளிர்ந்தபொழுது சுருங்கிச் சுழல ஆரம்பித்தது. அப்பொழுது அதன் விளிம்புகள் உடைந்து சிதறி எல்லையற்ற வெளியில் எறியப்பட்டன. அவ்வாறு எறியப்பட்ட பகுதிகளே கிரகங்களாகி விட்டன. நமது பூமியும் இம்முறையில் தோன்றியதே. ஆனால் இக் கொள்கை இக் காலத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சூரியனுடைய மத்திய பாகத்திலிருந்து சிலபகுதிகள் வெடித்து வெளியே எறியப்பட்டன. அவையே உருப் பெற்று கிரக்ங்களாகி யிருக்கலாம் என்பது மற்றொரு கொள்கை.

ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ்(Sir James Jeans) என்ற பிரபல விஞ்ஞானி பிறிதொருகொள்கையைக் கூறியுள்ளார். அதை 'அலைத்தத்துவம்' (Tidal Theory) எனலாம். அதன்படி ஒரு நட்சத்திரம் சூரியனுக்கு அருகே வந்தபொழுது, கவர்ச்சிக் காரணமாக ஒரு சுருட்டு (Cigar) வடிவமான பாகமானது வெளியே இழுக்கப்பட்டிருக்கலாம். இப் பகுதி குளிர்ந்தபின் கிரகங்கள் அமைந்திருக்கலாம்,

கிரகங்களின் நகர்ச்சியை ஆராய்ந்து அதற்கான விதிகளைக் கண்டுபிடித்தவர் கெப்ளார் (Keplar) என்ற அறிஞர். கிரகங்கள் செல்லும் பாதை வட்டமாக இல்லாமல் நீண்டு கோழி முட்டை வடிவமாக இருக்கிறது; சூரியனுக்கு அருகே வரும்போது கிரகம் அதிவேகமாகவும், சூரியனுக்கு தூரத்தில் இருக்கும்போது மெதுவாகவும் இருக்கிறது. எல்லாக் கிரகங்களின் சம்பந்தப்பட்ட மப்ப கிரகத்திற்கும் சூரியனுக்கும் அக்கிரக வருஷத்திற்குமுள்ள விகிதம் ஒன்றே. இவ் விகிதங்களுக்கு 'கிரககதி விதிகள்' (Laws of Planetary motion) என்று பெயர்.

சூரியன் முதலிய கிரகங்கள் வான வீதியில் பவனி வரும் பிரதேசம் ராசி மண்டலம் (Zodiac or animal-circle) என அழைக்கப்படுகிறது. வட்ட வடிவமான இப் பிரதேசத்தை முப்பது, முப்பது பாகை (30°) கொண்ட பன்னிரண்டு இராசியாகப் பிரித்திருக்கின்றனர். இந்த ராசிகளில் சில குறிப்பிட்ட உருவுடைய நட்சத்திர கணங்கள் இருப்பதால் இவற்றைக் கண்டறிவது எளிதாக விருக்கிறது. அவற்றின் உருவத்திற்கேற்ப, அவை முறையே மேடம், இடபம், மிதுனம் என அழைக்கபெறுகின்றன. பன்னிரண்டு ராசிகள் பின் வருமாறு:– மேடம், இடபம், மிதுனம், கடகம்(நண்டு) சிம்மம், கன்னி துலாம், (திராசு) விருச்சிகம் (தேள்) தனுசு (வில்) மகரம், கும்பம், மீனம்.

இப் பன்னிரண்டு ராசிகளும் அடங்கிய நட்சத்திரங்கள் இருபத்தேழு. அவற்றை நம் நாட்டில் முறையே அசுவினி, பரணி, கார்த்திகை முதல் ரேவதி வரைப் பெயரிட்டு அழைக்கின்றனர். முன்பு கூறியது போல இவற்றை வான வீதியிற் கண்டு கொள்வது சுலபம்.

வான சாஸ்திரம் வளர்ந்திருக்கும் இந்நாளிலே ஒவ்வொரு மாதமும் அந்த மாதத்தில் நட்சத்திரங்களும் கிரகங்களும் எங்கு தோன்றக் கூடும் என்று செய்தித் தாள்களில் படவிளக்கம் தரப்படுகிறது. ஆர்வம் உள்ளவர்கள் அவ் விளக்கங்களைத் துணைக் கொண்டு இக் கோள்களை வான வீதியிற் கண்டு மகிழ்வுறலாம். உதாரணமாக பங்குனி மாதத்தை எடுத்துக் கொள்ளுவோம். இம்மாதம் முழுவதும் சூரியன் மீன இராசியில் இருக்கும். ஆகவே உதயத்தில் கிழக்கே சூரியன் இருப்பது மீன ராசி. மறையும் காலத்தில் மேற்கே மீன ராசி. இதைத் துணை கொண்டு மற்ற இராசிகள் இருக்குமிடத்தை அறியலாம். பூமியின் சுழற்சி காரணமாக ஒவ்வொரு தினமும் இவ்விராசிகள் முழுவதும் ஒரு சுற்றுச் சுற்றி விடுவதாகத் தோன்றும்.

நட்சத்திரங்கள்,கிரகங்கள் தவிர வான வீதியில் சில நேரங்களில் அழகிய வாண வேடிக்கைகளைக் காணலாம். ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு ஒரு பிரகாசமான ஜோதி கடிதில் சென்று மறையும். செல்லும்போது பற் பல நிறங்களோடு செல்லுவதும் உண்டு. இவற்றை 'எரி நட்சத்திரம்' (Shooting Stars அல்லது Meteors) என்று கூறுவர். ஒவ்வொரு நாளும் 240 லட்சம் எரி நட்சத்திரங்கள் விழுவதாகக் கணக்கிட்டிருக்கின்றன. இத்துணை எரி நட்சத்திரங்களும் பூமியின் மீது விழுந்தால் என்னவாகும்? நம்மைப் பிடித்த நல்ல காலம் அவ்வாறு நேரிடுவதில்லை. ஏனெனில் எரி நட்சத்திரங்கள் நம்மைச் சூழ்ந்த காற்று மண்டலத்தினைக் கடு வேகத்தில் ஊடுருவிச் செல்லும்போது எரிந்து ஆவியாகப் போய் விடுகின்றன. அதிலும் எஞ்சி ஓரிரண்டு பூமியின்மேல் விழுவதும் உண்டு. அவை காந்த சக்தியுள்ள கற்களாகக் காணப்படுகின்றன. அவற்றை விண் சுடர் கற்கள்

(Meteorite Stones) என்பர். அவ்வாருன கற்கள் நற் குறிகளாகக் கருதப்பட்டு வந்தன. மெக்காவில் முகம்மதி யர்களுக்குப் புனிதமான 'காபா' (Kabali) என்ற புனிதக் கருப்பு நிறக்கல் ஒரு விண் சுடர்க்கல்லாக இருக்கக் கூடு மென்று ஊகிக்கின்றனர். இக் கற்களில் இரும்பு நிக்கல் முதலியன காணப்படுகின்றனவே யொழிய உயிர்ப் பொருள்களின் அடையாளம் இல்லை. சிற் சில சமயங் களில் இக் கற்கள் மிகப் பெரியதாக யிருந்தால் விழும் இடத்தில் பள்ளத்தை உண்டு பண்ணி விடும். இவ்வாறு அமெரிக்காவில் அரிசோனு விலும், மேற்கு ஆப்பிரிக்கா வில் காணுவின் கடற்கரையிலுள்ள பொசும்டுவி (Lake Bosumtuvi) ஏரிக்கு அருகேயும் இரு பெரிய பள்ளங்கள் உள்ளன. அமெரிக்காவில் உள்ளது 500 அடி விட்டம் உடையது. விழுந்தகல் 1,000,000 டன் எடை இருக்கலா மென்று ஊகிக்கப்படுகிறது. மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ளது முக்கால் மைல் விட்டமும் 500 அடி ஆழமும் உடையது. உலகத்திலே இவ்வாறு ஏற்பட்ட மிகப் பெரிய பள்ளம் 6½ மைல் குறுக்குவிட்டமும் 1150 அடி ஆழமும் உடையது. இவ்வாருன விண் எரி சுடர்கள் நவம்பர் மாதத்தில் அதிகம் ஏற்படுகின்றன. இது வரை விண் சுடர் கற்கள் எவர்மேலும் விழுந்ததில்லை என்பது குறிப்பிடத் தக்கது. 1910 ஆம் ஆண்டில் இராமனுதபுரம் மாவட்டம் திருப்பத்தூரில் விழுந்த விண் சுடர்க்கல் ஒன்று சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப் பட்டிருக்கிறது. அதிகமான விண் சுடற் கற்கள் சைபீரி யாவில் விழுவதாகத் தெரிகிறது.

நெபுலா:- வான வெளியில் நிரந்தர வாசம் செய்யும் மற்ருெரு கூட்டம் 'நெபுலா.' நெபுலா என்ற சொல்லுக்கு மேகம் போன்ற, குழப்பம் நிறைந்த என்றெல்லாம் பொருள் உண்டு. தொலை நோக்கி ஆடிமூலம் வானத்தை

நோக்கினுல் மங்கலாக, புகைப்படலம் போன்று இவை தோன்றும். இவ்வாருன ஒரு தொகுதி பால்வீதிக்கு அருகே உள்ளது; இதனை (Andromeda) ஆன்டிரோமிடா என்பர். இவ்வற்றில் எரி கற்களின் துகள்களும் வாயுக்களும் மிகுந்திருப்பதாகக் கூறப்படுகிறது. அவை வெவ்வேறு உருவம் உடையன. சில, பிரகாசமாகவும் சில மங்கலாகவுமிருக்கின்றன. அவை சுயம்பிரகாசிகள் அல்ல; ஆனுல் அவை பிற கோள்களின் ஒளியைப் பிரதிபலிக்கச் செய்கின்றன. இதுவரை சுமார் பதின்மூன்ருயிரம் நெபுலாக்கள் கணக்கிற்கு வந்திருக்கின்றன.

வான வெளியை ஒளி மிக்க உலகமாகக் கருதலாம். இவ்வொளி பல்வேறு கோள்களாலும், காரணங்களாலும் ஏற்படுகிறது. இவ்வொளியின் மிக்க அதிசயமான பகுதி பூமியின் வட, தென் துருவங்களுக்கு மேலே சுமார் அறுபது மைல் உயரத்தில் தோன்றும் 'துருவ ஒளிக் கதிர்' மிக்க எழிலும் கவர்ச்சியும் உடையது. இவற்றை ஆங்கிலத்தில் (Aurora Borealis, Aurora Australis) என்பர். துருவங்களுக்கு மேலாக வெண்மையான அல்லது பச்சை நிறத்தில் வட்ட வளையமாகத் தோன்றும் இவ் வொளி பூமியின் காந்தத் துருவத்தினுல் நிகழ்வதாகக் கண்டுள்ளனர்.

அகண்ட வானத்தின் எழிலைக் கண்டு நடுக்கமும், ஆச்சரியமும், பணிவும் அடையாதார் எவருமிலர்.

அகண்ட வானத்தின் அமைப்பை நம் நாட்டிலும் இற்றைக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே ஆராய்ந்த பெரியார்களும் உண்டு. விக்கிரமாதித்தன் அவையிலிருந்த வராஹமிஹிரர் என்பவர் ராசி மண்டலத்தை ஆராய்ந்து சிறந்த வான சாஸ்திர நூல் எழுதியுள்ளார். அதனை அடிப்படையாகக் கொண்டுதான் இன்று

பஞ்சாங்கங்கள் கணிக்கப்படுகின்றன. பஞ்சாங்கத்திலிருந்து சூரியன், சந்திரன் முதலிய கோள்கள் பிரதி தினமும் எந்த நட்சத்திரத்திற்கருகே இருக்கின்றன என அறியலாம். உதாரணமாக இன்று திருவாதிரை என்ருல் சந்திரன், திருவாதிரை என்ற நட்சத்திரக் கூட்டத்திற் கருகே இருப்பதாக அறிந்து கொள்ளவேண்டும். பௌர்ணமி எந்த நட்சத்திரத்தில் ஏற்படுமோ அதைக் கொண்டுதான் அந் நட்சத்திரமே அந்தந்த மாதத்தின் பெயராக இடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத் தன்று பௌர்ணமி ஏற்படுகிறது; வைகாசி மாதத்தில் விசாகத் தன்று. இப் பெயர்களை சாகா சகாப்தத்தின் பன்னிரண்டு மாதப் பெயர்களில் காண்க. நம் நாட்டவர் இத் துறையில் செய்த சேவையை வைதிகம் என்று புறக் கணிக்காமல், வான சாஸ்திரத்திற்கு நம்நாடு என்ன செய்துள்ளது என்று அறிவது நமது கடமையும் உரிமையுமாகும்.

# கொய்த மலர்கள்

பிரார்த்தனை

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்ப மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ் சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செவ்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ !

—திருநாவுக்கரசர்

காளியை எதிர்த்த ஞானி

கொஞ்ச காலத்துக்கு முன்பு கேரளத்தில் நாராயணப் பிராந்தன் என்று அழைக்கப் பெற்ற ஒருவன் வாழ்ந்தான்.

உடலிலே ஒரு கோவணத்தைத் தவிர அவனுக்கு உடையொன்றும் கிடையாது. விசும்பே கூரை; பசும் புல்லே பித்தன் படுத்துறங்கும் மஞ்சம்; மக்களைச் சதா பயமுறுத்திக் கொண்டிருக்கிற உண்டி, உடை, இருப்பிடம் ஆகியவற்றைப் பற்றிய பிராந்திகள் நராயணனை அணுகவில்லை,

ஒரு நாள் மாலை வேளையில் நாராயணப் பிராந்தன் ஓர் ஊருக்கு அருகில் உலாவிக் கொண்டிருந்தான். எங்கும் அமைதி குடிகொண்டிருந்தது; அதைவிடப்

பன்மடங்கு அதிகமான அமைதி உன்மத்தனது உள்ளத்தில் ஒளிர்ந்தது. இருளும், படலம் படலமாக விரைவில் வந்து சூழ்ந்தது. இனி ஓரிடத்தில் நெருப்பைக் கிளப்ப உட்காரவேண்டுமென்று அவன் குனிந்தபோது, கண்ணெதிரே தீ வெளிச்சம் ஒன்று தென்பட்டது. தான் அமர்ந்திருந்த இடம் சுடுகாடு என்று அப்பொழுது அவனுக்கு விளங்கிற்று.

சிலம்பொலி கேட்கிறது; சூரியோதயம் போன்று ஒலிப்பிழம்பு உருவெடுக்கிறது. பயங்கரமே உருவெடுத்துள்ள சம்ஹார சொரூபிணி பிரசன்னமாகிறுள்.

"எமக்குரிய இடத்தை விட்டு அகன்ருேடு; அல்லாவிடின் அண்டங்கள் அடிபடும் அடியின்கீழ் நீ மட்டும் மிஞ்சுவது எங்ஙனம் ?'' என்ருள் காளி.

" இப் பரந்த உலகில் உனக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை எனக்கு முண்டு. உட்கார்ந்த இடத்தை விட்டு அஞ்சி நான் அகலுதல் கிடையாது. அதோ அங்கே சென்று நீ விரும்பியவாறு ஆடு" என்று பிராந்தன் பித்தம் தலைக்கேறியவன் போல உரைத்தான்.

அத்தகைய வீரமொழிகளைக் காளிதேவி, முன்பு எங்கும் கேட்டது கிடையாது. தன் தாண்டவங்களில் மிகக் கொடியதும் பயங்கரமானதுமான சம்ஹாரத் தாண்டவத்தைத் துவக்கினுள்.

உயிர்களை வாட்டுகிற சம்ஹாரத் தாண்டவம் பிராந்தனுக்குச் சப்பையாகத் தோன்றியது. இவளுடைய ஆர்ப்பாட்டம் இவ்வளவுதானே என்று எண்ணினுன்.

" உம். உன்னுடைய பொம்மலாட்டம் முழுவதையும் காட்டு, வேண்டுமானுல் இந்த உடலையும் எடுத்துக்

கொள்" என்று கூறிப் பிராந்தன் தன் காளி தேவிக்குப் படைத்தான்.

பயங்கரி தேவிக்கு வெட்கம் வந்து விட்டது. அவளுடைய கொடூரச் செயல் பிராந்தனிடம் பலிக்கவில்லை.

தேவி:- மகனே! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்.

பிராந்தன்:- நான் யாரிடத்திலும் எதையும் கெஞ்சிக் கேட்பதில்லை.

தேவி:- என் தரிசனம் கிடைத்தவர்க்கு நான் ஏதாவது வரம் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆதலால் என் பொருட்டு நீ ஏதாவது ஒன்றைக் கேட்பாயாக!

பிராந்தன்:- (சற்று சிந்தித்து விட்டு) அப்படியானால் எனது இடது காலில் இருக்கும் இந்த வீக்கத்தை எனது வலது காலுக்கு மாற்று.

தேவி:- பிராரப்த கருமத்தை மாற்றியமைக்கும் சுதந்திரம் எனக்கில்லை.

பிராந்தன்:- அப்படியாயின் உன்னிடமிருந்து பெறும் வரமும் எனக் கொன்று மில்லை.

மாயாதேவி வேறு ஒன்றும் செய்ய முடியாதவளாய் மறைந்தாள். —சுவாமி சித்பவாநந்தா

இறைவன் நகைக்கும் சமயங்கள்

இறைவன் இரண்டு சமயங்களில் புன்னகை புரிகிறான். முதலாவது, ஒருவன் கொடும் வியாதியால் அவஸ்தைப் பட்டு மரணத் தருவாயில் இருக்கும் பொழுது, வைத்தியன் உள்ளே வந்து நோயாளியின் தாயைப் பார்த்து, "பயப்பட வேண்டாம்; உன் மகனுடைய உயிரைக் காப்பாற்ற நான் இருக்கிறேன்" என்று சொல்லும்போது.

இரண்டாவது, இரண்டு சகோதாரர்கள் தங்களுடைய நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ள அளவுகோலைக் கையில் எடுத்துக் கொண்டு கோடு கிழித்து, "அந்தப் பக்கம் என்னுடையது" என்று சொல்லும்போது.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

குழந்தை

பிறப்பிலும் சாவிலும் சிறு குழந்தை தனது தெய்வீகத் தன்மையை விளக்குகிறது. குழந்தையின் பார்வையில், அருட்சுடர் ஜோதி வெள்ளமாய்ப் பெருக்கெடுத்துப் பொங்குகின்றது. அதன் குட்டிக் குரல் அன்புச் சுடர். அதன் சிறுவிரல் இதழ்கள் பூவின் ஞாபகச் சுடர். சிறு குழந்தையின் கண்ணில் பிறக்கும் அருட் கடலில் மனிதனின் துன்பம் கரைந்து மறைகின்றது. தாயின் பால் குடிக்கும் பச்சிளம் குழந்தை, தெய்வக் குழந்தை.

—ஸ்வின்பர்ண்

நீ

"நீ" என்பது இல்லாதபோது நீ நிருவாண நிலையில் உள்ளனை. நீ மிகச் சிறந்த நிலையில் இருப்பதும், நீ உண்மையாய் இருப்பதும், 'நீ' என்பது இல்லாத பொழுதே, அதாவது சிறுமை யுடைய அகங்காரம் ஒழியும் பொழுதே.

—சுவாமி விவேகாநந்தர்

அக்பரும் பக்கிரியும்

ஒரு காலத்தில் அக்பர் சக்கரவர்த்தியின் முன் ஒரு பக்கிரி யாசிக்கச் சென்றார். அக்பர் தாம் ஆண்டவனிடம் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு பக்கிரியின் விஷயத்தைக் கவனிப்பதாகக் கூறினார்.

பக்கிரி, சக்கரவர்த்தியை நோக்கி, 'நீ சக்கரவர்த்தியென்று உன்னிடம் பிச்சை கேட்க வந்தேன். ஆனல்

நீயே ஒரு பிச்சை கேட்கவேண்டும் என்கிருய். அந்த ஆண்டவனிடமே நானும் ஏன் பிச்சை கேட்டுக் கொள்ளக் கூடாது" என்று கூறிவிட்டு பக்கிரி தன் வழியே சென்ருர்.

பிரார்த்தனையின் சக்தி

நாம் கனவிலும் கருத வொண்ணுத அளவுக்குமேல் காரியங்களைப் பிரார்த்தனையால் சாதிக்கலாம்.

—ஆங்கிலக் கவி டென்னிஸன்

ஆண்டவன் அருள்

எவன், இவ்வுலகத்தைப் படைத்து ஆட்டி வைக்கும் சக்தியுள்ள ஆண்டவனிடம் திட நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்கிருனே, அவனுக்கு ஆண்டவன் தன் அருளைப் புரிவான்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

என் தாய்

நான் பேரன்பு செலுத்தியது என் தாயிடம்தான். அவள் அன்பும், கருணையும் உறுதியும் நிறையப் பெற்றவள். அவள் பெயர் ரோஸா.

என் தாய் எங்களை வளர்த்தது மட்டிலு மன்று; எங்களுக்கு ஆரம்பக் கல்வியும் போதித்தாள். அவள் எவ்வளவு பொறுமையுடன் உழைத்தாள் என்று, எனது மிகச் சிறுவதிலேயே அவளை நான் வியந்து போற்றினேன்.

அவள் மனத்துக்கு அதிருப்தி உண்டாக்கவே கூடாது என்பதுதான் என் பய மெல்லாம். எனது விஷமங்கள், துஷ்டத்தனங்கள், விளையாட்டுத் தனமான திரிசமன்களை யெல்லாம் அவள் அறிந்து விடாமல் மறைப்பதற்காக என் பாட்டியையும் பக்கத்து வீட்டார்களையும்

கூட நான் அனுசரித்துக் கொள்வேன்; ஏனெனில் என் தாய் மனம் நோகலாகாதே என்பதில் எனக்குள்ள பயம் அவர்களுக்குத் தெரியும்.

—முசோலினி

ரானடேயின் வசியம்

ரானடே என்ற பிரபல இந்திய தேச பக்தருக்கு மிக விரோதமாகி இருந்தவர் குண்டே என்ற மற்றொருவர். குண்டே ஒரு பொதுக் கூட்டத்தில் ரானடேயைக் கண்டித்துப் பேசிக் கொண்டிருந்தார். அக் கூட்டத்துக்கு ரானடேயும் வந்து சேர்ந்தார்.

அது வரையில் கூட்டத்தை நேரே பார்த்துப் பேசிக் கொண்டிருந்த குண்டே, ரானடேயைக் கூட்டத்தில் கண்டதும், தம் முதுகை ரானடேயின் பக்கம் திரும்பி, சுவற்றைப் பார்த்து பேசிவிட்டுத் தம் இடத்தில் அமர்ந்தார்.

குண்டே பேச்சை நிறுத்தியதும் ரானடே மெதுவாகத் தம்மிடத்தை விட்டு எழுந்து குண்டே அருகில் சென்று அமர்ந்தார். குண்டேயின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. அவர் கண்கள் சிவந்தன. உதடுகள் துடித்தன. முகம் கடுகடுத்தது. உடனே குண்டே தம்மிடத்தைவிட்டு எழுந்து வீதியில் காத்திருந்த தம் வண்டியில் ஏறச் சென்றார். ரானடேயும், முகத்தில் எவ்விதக் கோபக் குறியும் இல்லாமல் குண்டேயைப் பின் தொடர்ந்தார்.

"குண்டே சாகேப்! வாருங்கள், நாம் இருவரும் என் வண்டியிலேயே போகலாம்" என்றார் ரானடே.

"நான் உம்முடைய வண்டியில் வரத் தயாராய் இல்லை" என்று சொல்லிவிட்டுத் தம் வண்டியில் ஏறினார் குண்டே.

"சரி; நீங்கள் என் வண்டியில் வரத் தயாராய் இல்லாவிட்டால் போகிறது; நானே உங்களுடைய வண்டியில் வருகிறேன். உங்களுடன் பேசி அதிக நாளாயிற்று. பேச வேண்டியது எவ்வளவோ இருக்கிறது" என்று கூறி ரானடே, குண்டேயின் வண்டியில் ஏறிக் கொண்டார்.

குண்டேக்கு இன்னது செய்வது என்று புரியவில்லை. இருவரும் சுமார் இரண்டு மணி நேரம் பேசிக் கொண்டே வண்டியில் சவாரி செய்து விட்டு வீடு போய்ச் சேர்ந்தார்களாம்.

மறுநாள் குண்டே, ரானடேயின் கட்சியில் சேர்ந்து கொண்டார். அதன் பிறகு இருவருக்கும் நேசம் ஏற்பட்டது.

**எது மேல்?**

தலை பணிந்து வாழ்வதைவிட, நிமிர்ந்து நின்று சாவதே மேல்.

—டொலோரீஸ் இப்பாருரி
(ஸ்பெய்ன் தேசபக்தர்)

# வைத்தியசாலை நண்பர்கள்

வென்டி ஹால்

இங்கிலாந்திலுள்ள வைத்தியசாலைகளில், டாக்டர்களையும் தாதிகளையும் தவிர நோயாளிகளுக்குப் பணிவிடை செய்ய வேறு சிலரும் உண்டு. ஒருவர் நோயாளிகளுக்கு, புத்தகங்களைக் கொடுத்து உதவுவார். வேறு ஒருவர் தேயிலைப்பானம் கொண்டு தருவார். வேறு ஒருவர் தபால் கார்டுகளையும் தலைகளையும் வாங்கி வருவார். இவர்கள் அனைவரும் 'வைத்தியசாலை நண்பர்கள்' என்ற ஸ்தாபனத்தின் தொண்டர்கள்.

வைத்தியசாலைகளில் டாக்டர்களும் தாதிகளும் ஓய்வில்லாமல் உழைக்கிறார்கள். குடும்பத்திற்கு ஒரு கடிதம் எழுத வேண்டுமானால், தாதியிடம் காகிதமோ, தபால் தலையோ கேட்க முடியுமா? வைத்திய வசதிகளைக் கவனிப்பதற்கே பொழுது சரியாக இருக்கிறதே. ஆனால் தினசரி பிற்பகலில், வைத்தியசாலை நண்பர்களைச் சேர்ந்த பெண்மணி வருகிறாளே, அவளிடம் காகிதம், பேனா முதலியவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். கார்டு, தபால்தலைகள் முதலியவற்றையும், படிப்பதற்குப் பத்திரிகைகளையும் அவள் கொண்டு வருகிறாள். நோயாளிகளுக்கு உதவவேண்டும் என்ற நோக்கத்துடன், அவள் இந்தப் பணியை ஏற்றுக் கொண்டிருக்கிறாள்.

வேறு ஒருவர் நோயாளிகள் விரும்பும் புத்தகங்களை வைத்தியசாலை நூலகத்திலிருந்து எடுத்துக் கொண்டு

வருவார். சில வைத்தியசாலைகளில், மாலை நேரத்தில் வயதான நோயாளிகளுக்குத் தேயிலைப் பானம் தரவும், பொழுது போக்காகப் பேசவும், தொண்டர்கள் வருவதுண்டு. நோயாளிகளில் ஒருவர், வைத்தியசாலை யிலேயே தமது பிறந்த நாளைக் கொண்டாட விரும்பினால் வைத்தியசாலை நண்பர்கள் அதற்கு ஏற்பாடுகளைச் செய்வார்கள்.

பிரிட்டனில், நாடெங்கும் இம்மாதிரி ஸ்தாபனங்கள் உண்டு. இடத்திற்கும் வசதிக்கும் ஏற்றபடி அவற்றின் அலுவல் திட்டம் இருக்கும். வட இங்கிலாந்திலுள்ள ஒரு ஸ்தாபனத்தில் சந்தாச் செலுத்துவோர் பத்தாயிரம் பேர்கள் உண்டு. இவர்களைத் தவிர தொண்டர்களும் உண்டு. இந்த ஸ்தானத்திற்கு நிதிவசதிதர, அந்தப் பகுதியிலுள்ள தொழிலாளர்கள், வாரச் சம்பளத்தில் ஒரு பென்னியை கொடுக்கிறார்கள்.

இங்கிலாந்திலும் வேல்ஸிலும், வைத்திய வசதிக்காக மட்டும் ஆண்டுக்கு நானூற்றைம்பது கோடி ரூபாய் செலவாகிறது. அதாவது, மூவருள்ள ஓர் குடும்பம், நூறு ரூபாய் வரி செலுத்தினால், இந்தச் செலவைச் சரிக்கட்ட முடியும். இதர வசதிகளையும், அரசாங்கத்தாரே தரமுற்பட்டால், வரிச்சுமை அதிகரித்துவிடும். ஆகவே, இந்தப் பொறுப்பை சமூகநல ஸ்தாபனங்கள் ஏற்றுக் கொண்டுள. இவற்றில் ஒன்றுதான் வைத்தியசாலை நண்பர்கள்! நோயாளிகளுக்கு மகிழ்ச்சியும் மன அமைதியும் தர, அவர்கள் உழைக்கிறார்கள், அவர் களுடைய பணிக்குத் தேவையான பொருளை, பொது மக்கள் மனமுவந்து தருகிறார்கள்.

நோயாளிகளுக்கு, பொழுதுபோக்க ரேடியோ, டெலிவிஷன் பெட்டிகள் கிடைக்கின்றன. சில

வைத்தியசாலைகளில், அன்பர்கள் உதவியால் கட்டப்பட்ட பிரார்த்தனை மண்டபங்களும் உண்டு. இந்தப் பணிக்கு உதவி செய்வோரும் உண்டு, உழைப்பைத் தருவோரும் உண்டு.

பிரிட்டனில், வைத்தியசாலை நண்பர்களுக்குப் பொருளுதவியும் உழைப்பும் தருவோர் எண்ணிக்கை இரண்டு லட்சம். அன்புப்பணிக்கு வரம்பு கிடையாது. கொள்வாரும் கொடுப்பாரும் மனநிறைவுடன் இருப்பதால், சிறந்த பயனுமுண்டு. நாளுக்கு நாள் பணியும் விரிவடைந்து வருகிறது. தொண்டர்கள் எண்ணிக்கையும் அதிகரித்துவருகிறது.

# சுவாமி பரமானந்தரின் கடிதம்

அன்புள்ள அ......

உனது கடிதமும், உனது நண்பன் கடிதமும் கிடைத்தன. உன்னுடைய நண்பனின் நோக்கம் என்னவென்று எனக்குச் சரியாகப் புரியவில்லை. அவன் கல்யாணம் செய்துகொள்ள விரும்பவில்லை. தன்னுடைய நாட்டுக்கு உழைக்க வேண்டும் என்று விரும்புகிறான். அது சரி; ஆனால் அவன் தனது மேனாட்டுக் கல்வியைச் சரியாக உணரவில்லை என்று தோன்றுகிறது. ஒருவனுடைய குணமும் ஒழுக்கமும் உருவாகும் வரையில், அவன் பிறருக்குத் தொண்டு புரிவது எவ்வாறு சாத்தியமாகும் என்று எனக்குத் தெரியவில்லை. தன்னுடைய பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாத ஒருவன், சமூகத்திற்குத் தொண்டு செய்ய முடியாது என்பது எனது நம்பிக்கை என்ற போதிலும் அவன் உடல் நன்றாக இருக்கிறது. அவன் தூய வாழ்வு வாழ்ந்தால் ஆத்மீக வாழ்வு வாழ்வதற்கு ஒருவேளை அவனுக்கு விருப்பம் உண்டாகலாம்.

கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பது நல்லது தான், பிரம்மச்சரிய விரதத்தை அனுஷ்டிப்போர் அபூர்வ சக்திகளைப் பெறுகின்றனர். அப்பேர்ப்பட்டவர்கள் மூலந் தான் தெய்வீக் சக்திகள் மிளிர்வதைக் காண்கிறோம்.

உனது நண்பன் நல்லவன்; முன்னுக்கு வரும் அறிகுறிகள் தோன்றுகின்றன. அவன் கஷ்டப்பட்டு

பொறுமையுடன் சாதனைகள் செய்தால், ஆத்மீகத் துறையில் முன்னேறலாம். பி. ஏ., அல்லது எம். ஏ., பட்டம் பெற்று ஒரு பாரிஸ்டராக வந்து பணம் சம்பாதிப்பது என்பது வாழ்க்கையில் ஓர் உயர்ந்த லட்சியம் அல்ல. அது தாற்காலிகமான இன்பத்தைத்தான் தரும். கடவுளை அடைவதற்கு அது துணை செய்யாது. கடவுளை அடைவதுதான் மனித வாழ்க்கையின்லட்சியம்.

முதலாவது, நடத்தையைச் செம்மைப் படுத்திக் கொள். நல்லொழுக்கம் இருந்தால் நீ ஏற்கும் எந்தக் காரியத்தையும் சுலபமாகச் செய்யலாம். பட்டப்படிப்புக்காகப் படிக்கும் நேரத்தில் பத்தில் ஒரு பங்கைச் செலவுசெய்து மத சம்பந்தமான நூல்களை வாசித்தால், உத்தம வாழ்க்கைக்கு வேண்டிய அநேக எண்ணங்களும் கொள்கைகளும் உன் மனத்தில் பதியும்.

புனிதத்தன்மை வாய்ந்த நீதி நூல்களையும், மத நூல்களையும், வாசிப்பதற்கு நேரமில்லை என்று மாணவர்கள் கூறுகின்றனர். என்னருமை மாணவனே, நீ ஒரு மனிதனாக ஆகி, அழியா இன்பத்துடன் வாழ விரும்பினால் தியானத்தில் ஆழ இறங்கு. கடவுளை அடைய அல்லது அந்த முயற்சியில் இறக்க உறுதி கொள்.

# இந்திய யூனியன் பிரதேசங்கள்

மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் ஹிமாசலப் பிரதேசம், டில்லி, மணிப்பூர், திரிபுரா ஆகிய நான்கு பிரதேசங்கள் இருக்கின்றன. அவற்றின் விஸ்தீரணம் சுமார் 26 ஆயிரம் சதுர மைல். ஜனத்தொகை நாற்பத்தைந்து லட்சம்.

இந்திய யூனியன் பிரதேசங்களில் டில்லி நீங்கலாக ஏனையவற்றில் உள்ள மக்கள் வாழும் சூழ்நிலையும், வாழ்க்கை அமைப்பும், அவர்களின் பிரச்னைகளும் அநேகமாய் ஒருப்போலவே உள்ளன; பொருளாதாரம் பின்னடைந்த நிலையிலேதான் இருக்கிறது. அவர்களின் தேவைகள் மிக அதிகம். நல்ல சாலை முதல், சாதாரண நல்ல கலப்பைவரை எவ்வளவோ அபிவிருத்திகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், அவர்களின் வருமானம் மிகக் குறைவு. எனவேதான் அப்பிரதேசங்களை மத்திய அரசாங்கத்தார் தங்கள் நேரடி ஆதரவில் எடுத்துக்கொண்டார்கள்.

இந்தியப் பார்லிமெண்டு, இவற்றின் விவகாரங்களை உள்விவகார மந்திரிமூலம் நேரடியாகக் கவனிக்கிறது. அவருக்கு ஆலோசனை கூறும் குழு ஒன்று உதவியாக இருக்கிறது; அதில் பார்லிமெண்டு உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். அவர்களைத் தவிர ஒவ்வொரு பிரதேசத்தையும் சேர்ந்த சிலர் அவருக்கு உதவியாக இருப்பார்கள். கொள்கை, சட்ட நிரூபணம், வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பு முதலிய காரியங்களில்

அவர்கள் உதவி அவருக்குக் கிடைக்கும். யூனியன் நிர்வாகப் பிரதேசங்களுக்குப் பார்லிமெண்டில் அதிகப் பிரதிநிதிகள் இருக்கிருர்கள்; இதர நாட்டு சமஷ்டி ஏற்பாடுகளில் நேரடி நிர்வாகப் பகுதிகளுக்குப் பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் இல்லை.

மத்திய அரசாங்கத்தார் இப்பிரதேசங்களுக்குத் தாராளமாக மான்யங்களை அளித்து வருகிருர்கள். உதாரணமாக, ஹிமாசலப் பிரதேசம், மணிப்பூர், திரிபுரா ஆகியவை மொத்தச் செலவில் 35 சதவிகிதம்கூட தேடித் தருவதில்லை, ஹிமாசலப் பிரதேசத்தில் மத்திய அரசாங்கத்தின் பங்குச் செலவு 65 சத விகிதமாக இருக்கிறது; மணிப்பூரில் 80 சதவிகிதம்; திரிபுராவில் 90 சத வீதம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ஒதுக்கப் பட்டுள்ள தொகை மும்மடங்காக இருக்கிறது. முதல் திட்டத் தொகை 16 கோடி ரூபாய்; இரண்டாவது திட்டத் தொகை 46 கோடி ரூபாய்.

ஹிமாசலப் பிரதேச அபிவிருத்திக்குச் சாலைகள் தான் முதல் தேவை. முதல் திட்ட காலத்தில் இரண்டு கோடி ரூபாய் அதற்காகச் செலவிடப்பெற்றது. இரண்டாவது திட்டத்தில் அது இரட்டிப்பாயிற்று.

நாட்டிலிருந்து துண்டிக்கப்பட்ட நிலையிலிருக்கும் திரிபுராவுக்கு அஸ்ஸாமுடன் சாலைத் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதற்காக அஸ்ஸாம்—அகர்தலா சாலை அமைக்கப்பட்டுவருகிறது. அதற்கு மூன்றுகோடி ரூபாய்க்குமேல் செலவாகும். மணிப்பூரில் இரண்டு கோடி ரூபாய் சாலைகளுக்காகச் செலவாகும்.

கல்வி வசதியும் மற்ரெரு முக்கிய தேவையாகும். மணிப்பூரில் இப்போது 80 சதவிகிதம் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்கிருர்கள். சென்ற வருஷத்தில் மாத்திரம்

பத்தாயிரம் பேர் புதிதாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். திரிபுராவில் பள்ளிச் சிறுவர் விகிதாசாரம் 63 சதவிகிதம்.

டில்லியில் சென்றவருஷம் 34 புதிய மத்தியப் பள்ளிகளும் 46 ஆரம்பப்பள்ளிகளும் ஏற்படுத்தப்பெற்றன; இவ்வருஷம் எழுபது லட்சம் ரூபாய் செலவில் இன்னும் பல பள்ளிக்கூடங்கள் கட்டப்பெறும்.

வைத்திய வசதிகளும் துரிதமாக அபிவிருத்தியடைகின்றன. டில்லியிலும் இவ்வருஷம் புதிதாக வைத்தியக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தப்படுகிறது. டில்லி வைத்திய சாலைகளில் 4129 பேருக்குப் படுக்கை வசதி இருக்கிறது. திரிபுராவில் 30 லட்சம் ரூபாய் செலவில் வைத்தியசாலை அமைக்கின்றனர்.

மலைப்பாங்கான பகுதிகளாயினும் உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு இப்பிரதேசங்கள் கடும் முயற்சி செய்து வருகின்றன. தற்போது உற்பத்தி விகிதம் மிகக் குறைவுதான். உணவு உற்பத்தியைப் பெருக்கி உதவி புரிவதற்காகப் பணமும், உயர் ரக விதைகளும் கருவிகளும் வினியோகிக்கப்படுகின்றன. ஹிமாசலப் பிரதேசத்தின் விவசாயத் திட்டங்களுக்குள்ள தொகை முதல் திட்டத்தில் 25 லட்சம் ரூபாய்; இரண்டாவது திட்டத்தில் அது 70 லட்சம் ரூபாய்க்கும் அதிகம். மணிப்பூரில் முதல் திட்டத்தில் ஒரு லட்சம் ரூபாய்; இரண்டாவது திட்டத்தில் 10 லட்சம் ரூபாய். திரிபுராவில் முதல் திட்டத்தில் நாலரை லட்சம் ரூபாய்; இரண்டாவது திட்டத்தில் 31 லட்சம் ரூபாய்.

அந்தமான், நிக்கோபார், லட்சத் தீவு, அமினிதிவி, மினிகாய் ஆகிய தீவுகளும் நேரடி மத்திய ஆட்சியில் உள்ள பகுதிகள். அவை பார்லிமெண்டின் நேரடிப்

பொறுப்பில் இருக்கின்றன. அந்தமான், நிக்கோபார் தீவுகளில் மத்திய அரசாங்கத்தார் மக்கள் நலத்துக்காக நபர் விகிதமாய் 2000 ரூபாய் செலவிட்டு வருகிறார்கள். லட்சத் தீவுகள், மினிகாய் தீவுகளில் 1957-ல் மூன்றரை லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்க, 1958-ல் பத்து லட்சம் ரூபாய் செலவிடப் பெறுகிறது.

தீவுகளிலும், யூனியன் ஆட்சிப் பிரதேசங்களிலும் உள்ள மக்கள் அதிதுரிதமாக அபிவிருத்தியடைந்து இதர பகுதி மக்களுக்குச் சமமாக ஆவதற்காகவே மத்திய அரசாங்கத்தார் அங்கே தாராளமாகப் பணத்தைச் செல விட்டு உதவிபுரிந்து வருகிறார்கள்.

# வாழ்க்கைச் செலவுபற்றி ஆராய்ச்சி

பிரிட்டிஷ் மக்கள் தங்கள் ஊதியத்தை எப்படிச் செலவிடுகிருர்கள் என்பதுபற்றி ஓர் அறிக்கை பிரசுரமாயிற்று. மக்களுடைய வாழ்க்கை நிலை புள்ளி விவரத் தொகுப்புக்காக நடந்த பணிதான் இது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, நகரங்களிலும் கிராமங்களிலும் வாழும் சுமார் 13000 குடும்பங்களின் மூன்று வாரச் செலவை ஆராய்ந்து சராசரி வாழ்க்கை நிலை புள்ளி விவரத்தைத் தயாரித்தார்கள். இந்தத் தகவல்களைக் கொண்டு, யுத்த பிற்காலத்தில், மக்கள் எப்படிச் செலவு செய்கிருர்கள், அவர்கள் விரும்பி வாங்கும் பொருள்கள் எவை என்று ஊகிக்க முடிகிறது.

புதிய புள்ளி விவரம் 1956 ஜனவரியில் அமலுக்கு வந்தது. அதன் பிறகு மாதா மாதம் விலைவாசி மாற்றம் பற்றியும், சராசரி குடும்பத்தின் கொள்முதல் பற்றியும் தொகுக்கப்படுகின்றன. இந்தத் துறையில் தொழிற் சங்க இயக்கத்தினர்தான் தனி அக்கறை காட்டுகிருர்கள். தொழிலாளர்களுடைய ஊதியம் விலைவாசி ஏற்றத்திற்கு ஏற்ப அமைய வேண்டுமென்பதில் அவர்களுக்கு கருத்துண்டு.

ஒரு சில தொழில்களில் விலைவாசி ஏற்றத் தாழ்வுக்கு ஏற்றபடி தொழிலாளர்களுடைய ஊதியமும் ஏறி இறங்கும். இந்த ஏற்பாடு தொழிலாளர்–முதலாளி உடன்பாட்டின் விளைவு. பிரிட்டனிலுள்ள 2500,000

தொழிலாளர்கள், விலைவாசிக்கேற்றபடி, அடிக்கடி ஊதிய மாற்றம் செய்து கொள்வது. அல்லது குறியீட்டு எண்ணில் குறிப்பிட்டமாறுதல் ஏற்படும்போது-இத்தனை புள்ளிக்கு ஒரு முறை என்ற ஏற்பாட்டுக்குக் கட்டுப்பட்டவர்கள்.

மக்களுடைய செலவினங்களை ஆராயும்போது, சென்ற நான்காண்டுகளில் விசேஷ மாறுதல் இல்லை என்று தெரிகிறது. குடும்பத்திலுள்ள நபர்களுக்கேற்றபடி, உணவுச் செல்வில்தான் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

காரியாலயச் சிப்பந்திகளும் தொழிலாளர்களும் வருமானத்தைச் செலவிடுவது பற்றி ஆராய்ந்தபோது ஒரு உண்மை புலப்பட்டது. காரியாலயச் சிப்பந்தி வருமானத்தில் 11 சதத்தை குடிக்கூலிக்கும் 29 சதத்தை உணவுப் பொருள் வாங்கவும் செலவிடுகிறான். தொழிலாளி குடிக்கூலிக்கு 8 சதமும் உணவுக்கு 36 சதமும் செலவிடுகிறான். மற்றச் செலவுகளில், இருவருக்கும் அதிக வித்தியாசமில்லை.

சராசரி வருமானமுள்ள குடும்பங்களின் பழக்கவழக்கங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பும் இந்த ஆய்வுப் பணியால் கிடைத்தது. அதிக வருமானமுள்ளவர்களை விட சராசரி வருமானமுள்ளவர்களே ரேடியோ, டெலிவிஷன், வாத்தியக் கருவிகள் முதலியவற்றைக் கொள்முதல் செய்வதில் அதிகமாகச் செலவிடுகிறார்கள். பொதுவாக அனைவருமே புகையிலைக்கும் மதுபான வகைக்கும் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு செலவிடுகிறார்கள். எரிபொருள், மின்சாரம், உடை முதலியவற்றுக்குச் செலவிடுவதைவிட மதுபானம்-புகையிலை செலவு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் புள்ளித் தொகுப்பால் மக்களின் வாழ்க்கை-சமூக-நிலையை நிர்ணயிக்கமுடிகிறது. சிறந்ததோர் முயற்சி என்ருலும் மிகையல்ல. பிரிட்டிஷ் மக்கள் பரம்பரையாக மீன் உண்பவர்கள். வட இங்கிலாந்து மக்கள் லண்டன் வாசிகளைவிட, இரு மடங்கு, மீன் உணவுக்காகச் செலவிடுகிருர்கள். இடத்திற்கு இடம் பழக்க வழக்கம் மாறுகிறது என்பதைக் காட்டவே இங்கு இது குறிப்பிடப்படுகிறது. பொதுவில் புள்ளித் தொகுப்பு முயற்சி சிறந்ததோர் பணியாகும். அதனுல் மக்களுக்கும் உடனடியாக லாபம் உண்டு.

# இந்திய ரயில்

### ரயில் பாதை நீளம்

இந்திய ரயில் பாதையின் மொத்த மார்க்க நீளம் முப்பத்தையாயிரம் மைல். இந்திய ரயில் பாதை ஆசியாவிலேயே மிகப் பெரியதாகும்; உலகத்திலுள்ள மிகப் பெரிய ரயில் பாதைகளில் இது நான்காவது ஸ்தானத்தை வகிக்கிறது. சுதந்திரத்துக்குப் பிறகு இந்திய ரயில் பாதையில் அதிகப்படியாய் ஆயிரம் மைல் தூரத்துக்குப் புதிய மார்க்கங்கள் ஏற்படுத்தப் பெற்றுள்ளன.

### மின்சார ரயில்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், இந்தியாவிலுள்ள மின்சார ரயில் மார்க்கங்களின் தூரத்தை ஆறு மடங்கு அதிகப்படுத்துவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. இது, இரண்டாவது திட்ட காலத்தில் மேற்கொள்ளப்படுகிற மிகப் பெரிய திட்டமாகும். முதலாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 240 மைல் தூரமே மின்சார மயமாக்கப்பெற்றன. ஆனால், இரண்டாவது திட்டத்தின்படி அதிகப்படியாய் 1,434 மைல் தூரமுள்ள ரயில் பாதைகள் மின்சார மயமாகும்.

இந்தியாவில் முதலாவது மின்சார ரயில் பம்பாயிலிருந்து 1925 ஆம் ஆண்டு பிப்ரவரி 3-ந் தேதி யன்று புறப்பட்டது. மூன்று வருஷங்களுக்குப் பிறகு, முந்திய பி. பி. அண்ட் ஸி. ஐ. ரயில்வேயில் 1928 ஆம் ஆண்டு 8-ந் தேதி யன்று முதலாவது மின்சார ரயில் மார்க்கம்

திறந்து வைக்கப்பட்டது. அதற்கு மூன்று வருஷங்களுக்குப் பிறகு, அதாவது 1931 ஆம் ஆண்டு மே 11-ந் தேதியன்று, முந்திய தென்னிந்திய ரயில்வேயின் முதலாவது மின்சார ரயில் மார்க்கம் ஏற்பட்டது. கிழக்குப் பிராந்தியத்தில் ஹௌராவிலிருந்து 1957 ஆம் ஆண்டு டிசம்பர் 14-ந் தேதியன்று முதலாவது மின்சார ரயில் ஓட ஆரம்பித்தது.

சித்தரஞ்சன் தொழிற்சாலை

சித்தரஞ்சன் ரயில் எஞ்சின் தொழிற்சாலை 1957 ஆம் ஆண்டு டிசம்பர் கடைசி வரையில், அதாவது உற்பத்தி ஆரம்பித்ததிலிருந்து சுமார் எட்டு வருஷ காலத்தில்; மொத்தம் 625 டபிள்யூ. ஜி. ரக ரயில் எஞ்சின்களை உற்பத்தி செய்திருக்கிறது.

நிலக்கரி உபயோகம்

இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த நிலக்கரியில் மூன்றிலொரு பங்கை இந்திய ரயில்கள் உபயோகித்து வருகின்றன. சென்ற ஆண்டில் உற்பத்தியான மொத்தம் நாலுகோடி டன் நிலக்கரியில் ஒன்றேகால் கோடி டன் நிலக்கரியை ரயில்கள் உபயோகித்தன.

பிரயாண ஆர்வம்

இந்திய மக்கள் அதிகமாகப் பிரயாணம் செய்கின்றனரா?

ரயிலில் மாத்திரமே, இந்தியாவின் ஜனத்தொகையில் ஒரு சதவிகிதம் பேர் அதாவது சுமார் முப்பத்தெட்டு லட்சம் பிரயாணிகள் தினந்தோறும் பிரயாணம் செய்கின்றனர். இப்பிரயாணிகள் சராசரியாய் ஒவ்வொரு நாளிலும் பிரயாணம் செய்த தூரம் பன்னிரண்டு கோடி மைல்; அதாவது பூமத்திய ரேகை வழியாக உலகத்தை 4,800 தடவை சுற்றி வரும் தூரத்துக்கு அது சமமாகும்.

1941-ஆம் ஆண்டில் இந்தியாவின் ஜனத்தொகையில் பத்து லட்சம் பேருக்கு 4,390 பேர் வீதம் தான் தினந்தோறும் ரயிலில் பிரயாணம் செய்தவர். ஆனால், 1956 ஆம் ஆண்டில் இந்த அளவு பத்து லட்சம் பேருக்கு 10,650 பேர் வீதம் அதிகரித்தது; அதாவது கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு அதிகரித்தது.

கடின உழைப்பு

இந்தியாவிலுள்ள ரயில்கள் எவ்வளவு கடின உழைப்பை மேற்கொண்டுள்ளன?

சென்ற ஆண்டில் பிரயாணி ரயில்கள் தினந்தோறும் மொத்தம் 3,55,000 மைல் வீதம் பிரயாணம் செய்தன: கூட்ஸ் ரயில்கள் மட்டுமே தினந்தோறும் 2,37,000 மைல் பிரயாணம் செய்துள்ளன. மொத்தத்தில் பார்க்கும்போது இந்தியாவிலுள்ள ரயில்கள் ஒவ்வொரு நாளும், பூமத்திய ரேகை வழியாக உலகத்தை 25 தடவை சுற்றி வருவதற்குச் சமமான தூரம் வீதம், பிரயாணம் செய்துவருகின்றன; அவ்வாறு வருஷம் முழுவதும் பிரயாணம் நடைபெற்றுவருகிறது.

பிரயாணிகளும் லாபமும்

சராசரிக் கணக்குப்படி, இந்திய ரயில்கள், ஒரு மைல் தூரத்துக்கு ஒரு பிரயாணியை ஏற்றிச் செல்வதற்கு ஐந்தே கால் நயா பைசா வீதம் சம்பாதித்தன. ஒரு மைலுக்கு ஒரு டன் சரக்கை ஏற்றிச் செல்வதன் மூலம் பதினொரு நயா பைசா கிடைத்தது. அதாவது பிரயாணிப் போக்குவரத்தைவிட சரக்குப் போக்குவரத்து மூலம் இரு மடங்குக்கு மேல் வருமானம் கிடைத்தது.

சென்ற ஆண்டில் ரயிலில் பிரயாணம் செய்த 138 கோடிக்கும் அதிகமான பிரயாணிகள் மூலம் ரயில்வேக்

களுக்குக் கிடைத்த வருமானம் அவ்வருஷத்தின் மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்குதான்; பிரதான சம்பாத்தியப் பிரிவாகிய சரக்குப் போக்குவரத்து மூலம் கிடைத்த வருமானம் மொத்த வருமானத்தில் 57 சத விகிதமாகும்.

அதே ஆண்டில் பிரயாணி வண்டிகள் மொத்தம் பன்னிரண்டு கோடி மைல் தூரம்தான் ஓடின; இருந்த போதிலும் கூட்ஸ் ரயில்கள் மூலம் கிடைத்த வருமானம் பிரயாணி ரயில்கள் மூலம் கிடைத்ததைவிட எண்பத்து நான்கு கோடி ருபாய் அதிகமாகும்.

கங்கை பாலம்

வடக்கு பீகாருக்கான ரயில் போக்கு வரத்து முழுவதும், மொகாமேகாட் பகல்பூர் ஆகிய இடங்களுக்கு இடையே கங்கை நதியில் சரக்குப் படகுகளின் மூலமாகவே தற்போது நடந்து வருகிறது.

பீகாரில் கங்கை நதிக்குக் குறுக்காகத் தற்போதும் பாலம் எதுவும் இல்லை. அதனால் இந்த ராஜ்யம் வடக்குத் தெற்கு என்று இரு பகுதிகளாகத் துண்டு பட்டுக் கிடக்கிறது.

புதிதாகக் கட்டப் பெறும் பாலம் ரயில் ரஸ்தா பாலமாகும். இப் பாலம் வடக்குத் தெற்குப் பகுதிகளிலுள்ள ரயில் பாதைகளை இணைக்கும். தற்பொழுது படகில் பாலத்தைக் கடப்பதற்கு-காத்திருக்கும் நேரம் நீங்கலாக இரண்டரை மணி நேரம் ஆகிறது. பாலம் கட்டி முடிந்ததும் அரை மணிநேரத்தில் ஆற்றைக் கடந்து விடலாம்.

# மெட்ரிக் அளவு முறை

நம் நாட்டில் குறிப்பிடப் பெற்ற சில பகுதிகளில் 1958-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதிமுதல் மெட்ரிக் அளவு முறை நடைமுறையில்வரும். மெட்ரிக் அளவு முறையை மேற்கொள்வதென்று 1956-ஆம் ஆண்டில் இந்தியப் பார்லிமெண்டு சட்டம் நிறைவேற்றியது. என்றாலும் இத்தகைய பிரம்மாண்டமான சீர்திருத்தத்தைப் பல வருஷங்களில் கட்டங் கட்டமாய் மெதுவாகத்தான் நிறைவேற்ற வேண்டும் என்று உணர்ந்தது.

இந்த மாறுதல் சுமுகமான முறையில் ஏற்படுவதற்காகக் குறிப்பிடப் பெற்ற பிரதேசங்களில் ஏற்கெனவே உபயோகத்திலிருந்து வருகிற எடைகள் இன்னும் இரண்டு வருஷ காலத்துக்கு அதாவது 1960-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்வரை நீடிக்கும். அதுவரை மெட்ரிக் அளவு முறையும், பழைய முறையும் உபயோகத்திலிருக்கும். பின்னர் மெட்ரிக் அளவு முறைமட்டும் பூரணமாய் அமுலுக்கு வரும். படிப்படியாக, 1966-ஆம் ஆண்டின் இறுதியில் நாடு முழுவதும் பூரணமாக மெட்ரிக் அளவு முறைக்கு மாறிவிடும்.

### மெட்ரிக் முறை என்றால் என்ன ?

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் பல நாடுகளிலும் மக்களுக்குப் பத்துக்கு மேற்பட்ட எண்களைக் கையாளுவது பெரிய பிரச்னையாக இருந்தது. ரோமன் இலக்க முறைப்படி உள்ள I V X L C முதலியவை

கூட்டல், பெருக்கல் கணக்குகளுக்கு மிகவும் தகுதியற்ற வையாக இருந்தன. எகிப்தியர்கள் 18 என்ற எண்ணைக் குறிப்பிடுவதற்கு 3 3 3 3 3 3 என்று குறிப்பிட்டார்கள்.

சேர், மணங்கு முதலிய அளவுகள் இந்தியாவில் சாதாரணமாகப் பழக்கத்தில் இருக்கின்றன. கடைச் சாமான்கள் வாங்க மணங்கு, வீசை, பால் முதலியவை வாங்க படி, சேர் முதலியவை கையாளப்படுகின்றன. ஆனால், பெயர்தான் பொதுவாக இருக்கிறதே தவிர மணங்குகள் எல்லாம் ஒரே அளவா, அல்லது சேர் எல்லாம் ஒரே அளவா? இல்லை. சென்னையில் 24 தோலா = ஒரு சேர்; மத்திய பிரதேசத்தில் 40 தோலா = ஒரு சேர்; பம்பாயில் 80 தோலா = ஒரு சேர். சேர் 8 தோலா முதல் 112 தோலா வரையில் உள்ளதாக இருக் கிறது. உத்தரப் பிரதேசத்தில் பைலி என்பது ஐந்து சேர்; வேறிடங்களில் அது 4 சேர்; உத்தரப் பிரதேசத் தில் 60 சேர் ஒரு மணங்கு; இது கோதுமைக்கு மாத்திரம் கோதுமை மாவு வாங்குவதானால் ஒரு மணங்குக்கு 40 சேர். இது என்ன கணக்கோ?

சென்னை ராஜ்யத்தில் 12 படி கொண்ட மரக்கால் இருக்கிறது; 8 படி கொண்ட மரக்கால் இருக்கிறது, மூன்றரையே அரைக்கால், மூன்று படிகள் கொண்ட மரக்கால்களும் உள்ளன. நில அளவுக்கும், காணி வேலி, கோட்டை, பீகா முதலிய பல அளவுகளும் சமீப காலத்தில் நடப்புக்கு வந்த ஏக்கராவும் இருக்கின்றன. "பீகா" பீகாரில் வேறே, வங்காளத்தில் வேறே. ஒவ் வொரு விதமான எடை, படி, முகத்தல் அளவைகளிலும் 150க்கு மேற்பட்ட ரகங்கள் இருக்கின்றன.

எனவே, இந்தியாவில் எந்த ஓர் அளவு முறையும் பொதுவான முறையாக இல்லை என்பது தெளிவு.

பம்பாய் ராஜ்யத்தில் 1939-ல் இயற்றப்பட்ட சட்டம் மூலம் ராஜ்யம் முழுவதிலும் ஒரே ரீதியான அளவு முறைகள் இருக்கின்றன. இதர ராஜ்யங்கள் விஷயத்தில் அவ்வாறு கூறுவதற்கில்லை. ஆகையால் யாராவது எந்தச் சாமானை யாவது வாங்கும்போது ஒவ்வொரு தடவையும் விற்பவர் கூறுகிற அளவு முறையை வாங்குகிறவர் தமக்குப் பழக்கப்பட்ட முறையில் மாற்றிக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் சிரமமும் வேலை இரட்டிப்பும்தான் ஏற்படுகின்றன.

தரகர்களும் கொள்முதல் எஜெண்டுகளும் கள்ளப் படிகள், எடைகள் முதலியவற்றை உபயோகிப்பதால் விவசாயிகளுக்குப் பெரு நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. அத்தகைய மோசடிகளுக்குப் படிகளும் எடைகளும் இவ் வாறு பலதரப்பட்டவையாய் இருப்பது வெகு சௌகரிய மாகி விடுகிறது. எழுதப் படிக்கத் தெரியாத கிராமத்து விவசாயிக்குக் கஷ்டமாகிவிடுகிறது.

ஆனால், கிராமங்களில் மாத்திரம்தான் இக்கஷ்டம் என்பதில்லை. நகரங்களில் தங்கம் முதலிய ஆபரணப் பொருள்களை வாங்குபவர்களுக்கும் சற்று திணறலாகத் தானிருக்கிறது. விற்பது சவரன் எடை; வாங்குவது பகோடா எடை. இதில் வியாபாரிகள் திருட்டும் புரட்டும் ஏமாற்றலும் செய்கிறார்களோ என்று சந்தேகம் மக் களுக்கு ஏற்படுகிறது. ஏமாற்றும் புரட்டும் நடக்கா விட்டால் கூட, சந்தேகம் விட்டபாடில்லை. "ஏன் இப்படி அவர்கள் பல்வேறு படிகளை உபயோகிக்க வேண்டும்?" "இதென்ன, புது மாதிரி பாஷை பேசுகிறார்களே" என்று கேள்விகள் எல்லாம் மனத்தில் எழும்.

கி. பி. முதல்நூற்றாண்டில் இந்தியக் கணித சாஸ்திரி ஒருவர் எல்லா எண்களையுமே பத்தின் அடிப்படையில்

சுலபமாகக் குறிப்பிடுகிற ஒரு நூதன முறையை உருவாக்கினர். ஸ்தான மாறுதலைக்கொண்டு ஒவ்வொரு இலக்கமும் அதன் மதிப்பைப் பெற்றுவந்தது. அதோடு கூட அதற்குத் தனிப்பட்ட மதிப்பும் இருந்தது. இந்தத் தசாம்ச முறை இன்று அகில உலகிலும் அங்கீகரிக்கப் பட்ட முறையாகிவிட்டது. "அது மிகவும் சுலபமாக இருப்பதாலும், எல்லாவிதக் கணிப்பு முறைகளுக்கும் அது இடம் தருவதாக இருப்பதாலும், நம் கணக்கு முறை மக்களுக்கு மிகவும் பயனுள்ள ஒரு முக்கிய கண்டு பிடிப்பாக விளங்குகிறது" என்று லா பிளேஸ் என்ற கணித நிபுணர் கூறியிருக்கிறார்.

தசாம்ச முறையை எடை, படி ஆகியவற்றுக்கு விஸ்தரித்ததன் மூலம் மெட்ரிக் அளவு முறை உருவாக ஆயிற்று. அந்த மெட்ரிக் முறைதான் இப்போது உலகில் முக்கால் பங்கு நாடுகளில் அமுலில் இருக்கிறது.

சென்ற 100 வருஷ காலத்தில் 58 நாடுகள் இந்த முறையை மேற்கொண்டுள்ளன. ஒரே சீரான திட்டம் அமுலிலிருந்த நாடுகள்கூட அதைக் கைவிட்டுவிட்டு இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு இதை விசேஷமாக மேற்கொள்வதற்கு இத் திட்டத்தில் அப்படி என்ன சிறப்பு இருக்கிறது ?

மெட்ரிக் முறை 10 என்று சுலபமான இலக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது, ஒவ்வோர் அள வின் பல கூறுகளும் 10-ன் பெருக்கமாக இருக்கின்றன.

10 கிராம் = 1 டெக்கா கிராம்

10 டெக்கா கிராம் = 1 ஹெக்டா கிராம்

10 ஹெக்டா கிராம் = 1 கிலோ கிராம்

10 மில்லி மீட்டர் = 1 சென்டி மீட்டர்

10 சென்டி மீட்டர் = 1 டெஸி மீட்டர்
10 டெஸி மீட்டர் = 1 மீட்டர்
10 மில்லி மீட்டர் = 1 ஸென்டி மீட்டர்
10 ஸென்டி மீட்டர் = 1 டெஸி மீட்டர்
10 டெஸி மீட்டர் = 1 மீட்டர்.

நீட்டல் அளவோ, நிறுத்தல் அளவோ, முகத்தல் அளவோ எதுவாயிருந்தாலும் சரிதான். பெரிய அல்லது சிறிய அளவாக மாற்றுவதற்கு "10" கொண்டு பெருக்கவோ வகுக்கவோ செய்தால் போதும். இதற்குமாறாக, படி, மணங்கு முதலிய எடை, படிகள் விஷயத்தில் 8 ஆழாக்கு ஒரு படி என்பதையும் 40 சேர் ஒரு மணங்கு என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கணிக்கவேண்டும். அங்குலம், அடி, கஜம் என்றும் நீட்டல் அளவையிலும் 12, 8, 220, 8 என்று பல இலக்கங்களைக் கொண்டு பெருக்கவோ வகுக்கவோ வேண்டியிருக்கிறது.

இப்போது உபயோகத்திலிருந்து வருகிற அளவு முறைகள் எப்படி உருவாயின? நம் கையும் காலும்தான் அவைகளுக்கு அடிப்படை. எல்லா பாஷைகளிலும் அளவு முறைகள் ஏதாவது ஒரு அங்கத்தின் பெயராலேயே குறிப்பிடப்படுகிறது. "விரல்" "முழம்" "அடி" ஆகியவை இதற்கு உதாரணம். தானியம்தான் நிறுத்தல் அளவைக்கு அடிப்படை. "அரிசி" எடை, "குன்றுமணி" எடை, "மஞ்சாடி" எடை என்ற பிரயோகங்களைப் பலரும் கேட்டிருக்கலாம். "க்ரெய்ன்", "காரட்", "ராட்டி" என்னும் சொற்களும் தானிய அடிப்படையில் உருவானவைதான்.

பெரிய அளவுகளுக்கும் சிறிய அளவுகளுக்கும் உள்ள விகிதப் பொருத்தமும் இஷ்டப்பட்டபடி இருந்தது. 28

பவுண்ட் ஒரு குவார்ட்டர்; 4 குவார்ட்டர் ஓர் அந்தர். 3 தோலா ஒரு பலம்; 8 பலம் ஒரு சேர்; 40 சேர் ஒரு மணங்கு. இவற்றிற்கெல்லாம் மாருக மெட்ரிக் முறை ஒரு திட்டமான முறை. அது முழுக்க "10" என்னும் எண்ணேயே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இலக்கங்களைக் கணக்கிடுகிற தசாம்ச முறையின் விஸ்தரிப்பே மெட்ரிக் முறை.

ஸ்தான மதிப்பு

"432" என்ற இலக்கத்தை எடுத்துக்கொள்வோம்; அது நானூற்று முப்பத்திரண்டு என்ற மதிப்புள்ளது என்பதை நாம் உணர்கிருேம். அதில் 2 என்னும் இலக்கத்துக்கு 2 தான் மதிப்பு; 3 என்ற இலக்கத்துக்கு 30 மதிப்பு, 4 என்ற இலக்கத்துக்கு 400 மதிப்பு. பத்தாவது, நூருவது ஸ்தானங்களில் அவை இருப்பதால் இவ்வாறு அவை உயர்ந்த மதிப்பைப் பெறுகின்றன. எனவே ஸ்தானத்தால் மதிப்பு மாறுகிறது. இந்த ஸ்தான மதிப்பு முறை இந்தியாவில் உருவானதுதான். சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் அது இந்தியாவில் கண்டு பிடிக்கப்பட்டு கணித முறையிலேயே பெரும் புரட்சியை உண்டு பண்ணிவிட்டது.

தசாம்ச பின்னங்கள் இந்த முறையைக் கீழ்வாயிலக்கங்களுக்கு விஸ்தரிக்கிறது. ஒரு புள்ளியை (.) வைத்து பின்னங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. 45 என்று எழுதிஞல் அது நாற்பத்தைந்து; 4-க்கும் 5-க்கும் நடுவே ஒரு புள்ளியை வைத்து 4·5 என்று எழுதிஞல் அது நாலரை ஆகிவிடுகிறது. புள்ளிக்கு இடது புறம் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் ஸ்தானங்களாக உயரும்; எண்ணுக்கு வலதுபுறம் பத்தில் ஒன்று, நூறில் ஒன்று, ஆயிரத்தில் ஒன்று என்று குறையும். நாணய விஷயத்தை எடுத்துக்

கொள்வோம். 1 ரூபாய் = 100 சென்ட் (நயா பைசா); 7 ரூபாய் 35 நயா பைசா சேர்ந்த தொகை 735 நயா பைசா ஆகும்; அல்லது 7.35 ரூபாயாகும். பழையக் கணக்குப் படி அது 7—5—9 ரூபாய் ஆகும்.

தசாம்ச முறையிலிருந்து உருவான திட்டமானபடியால் மெட்ரிக் முறையை இந்தியாவுக்கு முற்றிலும் அந்நியமானமுறை என்று சொல்லுவதற்கில்லை. "பூஜ்யம்" "சுழி", அல்லது "சுன்னம்" என்று குறிப்பிடப்படுகிற இலக்கம் (0) இந்தியா உலகத்துக்கு அளித்த வெகு நுட்பமான பரிசாகும்.

ராஜாஜி கூறியிருப்பதுபோல், "இந்தியா இப்போது அதன் எடை, படி அளவுகளை சர்வதேச விஞ்ஞான உலகக் கணிப்பு முறைப்படி அமைப்பது மிகவும் பொருத்தம்தான்; அப்படி அமைப்பதன் மூலம் இந்தியா உண்மையில் தனக்குச் சொந்தமான தசாம்ச முறையைத்தான் கையாளுகிறது".

# அமெரிக்கக் கல்வி முறை

அமெரிக்கக் கல்வி முறையில் காணும் பல குறிப்பிடத்தக்க அம்சங்கள், வெகுவிரைவில் விஸ்தாரமடைந்து வரும் தங்கள் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் புகுத்தப்பட வேண்டியவையெனத் தாங்கள் நம்புவதாக அமெரிக்க பல்கலைக் கழகங்களையும் கல்லூரிகளையும் சுற்றிப் பார்த்து வரும் நான்கு இந்திய பல்கலைக் கழக ரிஜிஸ்ட்ரார்கள் கூறினர்.

ஆந்திரப் பல்கலைக் கழக ரிஜிஸ்டார் வேணுகோபல சாமி குர்மா, கல்கத்தா பல்கலைக் கழக ரிஜிஸ்டார் டாக்டர் துக்கஹரன் சக்கரவர்த்தி, காசி பல்கலைக் கழக ரிஜிஸ்டார் சிவாநந்தன் லால் டார், ப்ரஜ் கிருஷ்ண மன்சுர்லால் ஸுட்ஷி ஆகியயோர் அமெரிக்க ராஜாங்க இலாகாவின் சர்வதேச கல்வி பரிவர்த்தனைத் திட்டத்தின் அயல் நாட்டு நிபுணர்கள் திட்டத்தின்கீழ் அமெரிக்கா சென்றனர்.

அவர்கள் பத்துப் பன்னிரண்டு பல்கலைக் கழகங்களையும் கல்லூரிகளையும் பார்வையிட்டனர். அமெரிக்க விஞ்ஞானக் கல்வி மோசமான நிலையில் உள்ளதாக சிலர் குறை கூறுவதை ஒப்புக்கொள்ளவில்லை.

முன்னுள் ரஸாயன ஆசிரியரான டாக்டர் சக்ரவர்த்தி அமெரிக்க பல்கலைக் கழகங்களின் விஞ்ஞானப் பகுதிகளில் தாம் கண்ட பரிசோதனைக் கூடங்களும் ஆராய்ச்சி சாதனங்களும் தம்மை மிகவும் கவர்ந்துள்ளனவென்றும் கூறினர்.

ஆராய்ச்சித் துறைக்குப் பயன்படக்கூடிய மிகப் பெரிய விஞ்ஞானிகள் பலர் அமெரிக்காவில் உள்ளனர் என்று கோபாலசாமி வலியுறுத்திக் கூறினர். ஸ்புட்னிக்கு கள் வான வெளி இவற்றில் மட்டும் விஞ்ஞானம் அனைத் தும் அடங்கிவிடாது என்ருர் அவர்.

பள்ளிப் பரிட்சை, மாணவர்களைத் தரம் பிரித்தல், மேல் வகுப்புகளுக்கு அனுப்புதல் ஆகிய விஷயங்களில் அமெரிக்கப் பள்ளிகள் கையாளும் முறைகள் ஆழ்ந்த ஆர்வத்தைத் தூண்டியதாக அவர்கள் தெரிவித்தனர். உயர்தரப் பள்ளி மாணவர்களுக்கான நியூயார்க் மாகாண பரீட்சை முறை இந்தியாவில் தரப்படும் "போர்ட் ஆவ் ரீஜென்ட்ஸ்" பரீட்சைகளை ஏறக்குறைய ஒத்திருக்கின் றன என்று டாக்டர் சக்ரவர்த்தி குறிப்பிட்டார். ஆனல் இதர மாகாணங்களில் கல்வி முறைகள் அந்த அளவு ஒரே தரமாக அமைந்ததல்லவென்பதையும் கடைசி வகுப்பு மாணவர்களைப் பொறுத்த வரை ஆசிரியரின் சொந்தத் தீர்ப்பே முடிவானதாக இருக்கிறதென்பதையும் தாம் கவனித்ததாகக் கூறினர். பரீட்சை முறை களில் காணும் இத்தகைய "வேறுபாடுகள்" நன்மை பயப் பவையே என்றும் இவ் வேறுபாடுகளின் பல அம்சங் களும் ஒன்று கலந்த ஒரு புதுக் கல்வி முறையை இது தம் மனத்தில் தோற்றுவித்துள்ளது என்றும் அவர் கூறினர். அப்புதுக் கல்வி முறையை-அதாவது மாணவர்களின் தேர்ச்சியை நிர்ணயிப்பதில் சர்வாம்சம் பொருந்திய பரீட்சைகளில் கிடைக்கும் மார்க்குகளோடு ஆசிரியர் சொந்த ஹோதாவில் தரும் மார்க்குகளையும் வேண்டு மாகில் 75:25 என்ற விகிதத்தில், சேர்த்துக் கணக்கிடும் முறை இந்தியப் பள்ளிகளில் புகுத்தப்படுவதைக் காண தாம் விரும்புவதாகவும் அவர் கூறினர்.

பாடங்களிலும் சரி, இதர பள்ளி நடவடிக்கைகளிலும் சரி, மாணவர்கள் ஈடுபடுத்தப்படும் முறை இந்திய ரிஜிஸ்டார்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

மாணவரின் சமூக ஈடுபாடுகளுக்கென நிறுவப்பட்டுள்ள மாணவர் சங்க கட்டிடங்களும் பள்ளி வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலுமே அவர்களுக்குத் தரப்படும் ஆலோசனைகளும் தனது ஆழ்ந்த ஆர்வத்தைக் கவர்ந்ததாக டாக்டர் சக்ரவர்த்தி குறிப்பிட்டார்.

"ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலுமே மாணவர்களும் ஆண்களும் பெண்களும் கல்லூரித் தலைவர்களாக ஆலோசகர்களாக மாணவர்களுக்கு உதவி புரிவதைக் கண்டேன்" என்றார்.

இம் மாதிரி பாடங்கள் அல்லாத பள்ளி நடவடிக்கைகள் இந்தியப் பல்கலைக் கழகங்களில் புகுத்தப்படுவதைக் காண விரும்புவதாக ஸாட்ஷி கூறினர். இளைஞர்களில் சக்திப் பெருக்கைத் தகுந்த வழிகளில் செலுத்தி முரட்டு சுபாவங்கள் குறைந்தவர்களாகவும் மனப் பக்குவம் உள்ளவர்களாகவும் அவர்களைத் தோற்றுவிக்க இவை பெரிதும் உதவுகின்றன என்றார் அவர்.

"அமெரிக்க மாணவனின் நேரம் பெரும்பாலும் இவ்வாறு கழிந்து விடுவதால் முறையான காரியங்களுக்கோ அல்லது முறையற்ற காரியங்களுக்கோ அவனுக்கென்று கிடைக்கும் நேரம் மிகச் சொற்பம்" என்றார் ஸாட்ஷி. ஆனால் இதன் மூலம் மாணவர்களின் சிந்தனைக்கு அவகாசம் மறுக்கப்படுவதாக அர்த்தமாகி விடாது என்று அவர் கூறினர்.

"முழு மனிதர்கள்" ஆக மாணவருக்கு கற்றுக் கொடுப்பதுதான் கல்வியின் நோக்கம் என்று கூறிய டார்,

அமெரிக்கப் பள்ளிகளில் உடற்பயிற்சி, விளையாட்டுகள் ஆகியவைகளில் மாணவருக்கு அளிக்கப்படும் கவனம் மிக முக்யத்வம் வாய்ந்ததென்று கூறினர். "தோல்வியிலும் புன்முறுவல் கொள்வது" என்பது போன்றவைகளை பாட புத்தகங்களிலிருந்து கற்றுக் கொள்வது சாத்யமில்லை என்றார் அவர். விளையாட்டு போட்டிப் பந்தயங்களை வேடிக்கை பார்ப்பவர்கள்கூட எவ்வளவோ கற்றுக் கொள்ள முடிகிறது என்று அவர் கருதுகிறார்.

இந்திய ராணுவத்தில் மேஜர் ஸ்தானம் வகிக்கும் டார் இந்தியாவிலுள்ளது போலவே அமெரிக்காவிலும் மாணவ ராணுவப் பயிற்சிப் படையினருக்கு (ஆர். ஓ. டி. சி) அளிக்கப்படும் பயிற்சியில் பிரஜா தத்துவப் பயிற்சிக்கு முக்யத்துவம் அளிக்கப்படுவது பற்றி மகிழ்ச்சி தெரிவித்தார்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்யப்படக்கூடிய பரீட்சார்த்த நாடக அரங்கு கோபாலசாமியின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளது. தனது சுற்றுப் பிரயாணங்களின்போது அமெரிக்கப் பல்கலைக் கழகங்களின் நாடகக் குழுக்களில் பெரும் ஆர்வம் காட்டிய இவர் ஒளியமைப்பு, சங்கீதம், நாடக அளிப்பு முறை, புது நாடகங்களுக்குத் தேவைப்படும் கருத்துகள், பழங்கால நாடகங்களை இன்றைய தேவைகளுக்குத் தகுந்தாற்போல் புதுப்பித்தல் ஆகியவைகளில் புதுக் கருத்துக்களோடு தாய் நாடு திரும்புவார். அவர் வால்டேர் பல்கலைக் கழகத்தில் 109 நாடகங்கள் அளித்தவர். தொழில் ரீதியில் வருவாய் தரக்கூடாத நாடகங்கள் பல நாடகம் என்ற ரீதியில் தயாரித்தளிக்கப்படத் தகுந்தவை என்ற அபிப்பிராயம் கொண்டவர் இவர்.

நாடகத் தொழிலின் மையமாக விளங்கும் பிராட்வே சம்பந்தப்படாத நாடக அரங்குகளிலும் பல்கலைக் கழக நாடக அரங்குகளிலும் மிக உயர்ந்த நாடகங்கள் தயாரித்து நடத்தபடுவதை அமெரிக்காவில் கண்டதாக அவர் கூறினர்.

இந்தியாவில் நாடக இயக்கம் ஒன்றை மும்முரமாக ஆரம்பிக்கப் போவதாக கோபாலசாமி கூறினர். பிராந்திய ரீதியில் இயங்குவதற்கென்று வகுக்கப்படும் இத்திட்டத்தின்படி பல ராஜ்யங்களில் மையமாக உள்ள இடங்களில் நாடகக் கம்பெனிகள் நிறுவப்படும். இக்கம்பெனிகள் மற்ற நகரங்களிலும் ஊர்களிலும் தாங்கள் தயாரிக்கும் நாடகங்களை நடத்துவார்கள்.

அமெரிக்கா பற்றி தாங்கள் கண்டறிந்தது வெறும் கல்வி நோக்கில் மட்டும்தான் என்ற எண்ணத்தைத் தவிர்க்க விரும்புவதாக இந்த ரிஜ்ஸ்ட்ரார்கள் கூறினர்.

“நீங்கள் விருந்தோம்பும் பண்பு நிரம்பப் பெற்றவர்கள். எங்களையும் அதே போல் மற்றவர்களையும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வம் உங்களிடம் பொங்கக் காண்கிறோம். இது ஒரு முக்கியமான் அம்சம்” என்றார்டார்.

# அமெரிக்காவில் தொழிலாளர் தினம்

செப்டம்பர் முதல் தேதி அமெரிக்காவில் தொழிலாளர்களுடைய ஆற்றலையும் பண்பையும் போற்றும் விடுமுறை நாள். நாட்டு மக்கள் எல்லோரும் கொண்டாடும் நன்னாள்.

1882-ம் ஆண்டில் அமெரிக்காவில் பீட்டர் மெக்குயர் என்னும் தொழிற்லாளர் தலைவர், நியூயார்க் மத்திய தொழிற் சங்கத்தில் பேசுகையில், தொழிலாளர் தினம் என ஒன்று வேண்டும் என்று கூறினார்.

முதல் தொழிலாளர் தினம் 1882 செப்டம்பர் 5-ம் தேதி நடந்தது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தொழிற் சங்க உறுப்பினர் நியூயார்க் நகரின் பேர்பெற்ற பிராட்வே வீதியில் பாட்டுப் பாடிக் கொண்டும், மேற்கோள் வாக்கியங்கள் அமைந்த அட்டைகளைப் பிடித்துக் கொண்டும் ஊர்வலமாகச் சென்றனர்.

தொழிலாளர் தினம் நாட்டின் விடுமுறை நாளக விளங்கவேண்டும் என்று பலரும் கருதத் தொடங்கினர். 1887-ல் ஒரேகான் என்னும் ராஜ்யம் செம்டம்பர் மாதத்துத் தலைத் திங்கட்கிழமையைத் தொழிலாளர் தினமாக்கி அன்று விடுமுறை என்று சட்டம் செய்தது. மற்ற ராஜ்யங்களும் அவ்வாறே செய்யலாயின. 1894-ல் அமெரிக்க மத்திய சட்டசபை தொழிலாளர் தினத்தை நாடு முழுவதற்குமுரிய விடுமுறை நாளாக்கியது.

தொழிலாளார் மதிக்கத் தக்க நிலை பெற்று, வாழ்க்கைப் பாதுகாப்பு பெற்று, வாழ்க்கைத் தரம் வளர்ந்து

ஆற்றல் மிக்கதோர் சக்தியாக விளங்க வேண்டு மென்று மெக்குயர் அன்று கண்ட கனவு, இன்று நனவாகி உள்ளது. தொழிலாளருடைய நலன்கள் எல்லாம் சுதந்திரப் பொருளாதார முறையிலேயே கிடைத்தவை; தொழிலாளர் தாமாகவே நேரடியாக அடைந்தவை; நிர்வாகிகளுடன் நேரடியாகப் பேரம் பேசிப் பெற்றவை.

கடந்த சில மாதங்களாக அமெரிக்கப் பொருளாதாரம் இறங்குமுகமாக இருந்துவந்தபோதிலும், குத்து மதிப்பாகப் பார்க்கும்போது, இன்றையத் தொழிலாளி 1882-ம் ஆண்டுத் தொழிலாளியை விட மும்மடங்கு அதிகமான ஊதியம் பெறுகிறார்.

1956-ல் நோய் நொடிக்கும் ஆஸ்பத்திரிச் செலவிற்குமான இன்சூரன்ஸ் திட்டத்தில் பாதுகாப்புப் பெற்றிருந்த மக்கள் தொகை 11 கோடி 20 லட்சம். இவையெல்லாவற்றுக்கும் வேண்டிய பணம் மக்கள் தங்கள் சம்பளத்திலிருந்து அப்பபோதைக்கப்போது கொடுக்கும் சிறு சிறு தொகைகளே. வேலையில்லாக் காலத்துக்கு ஈடுகொடுக்கும் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் தொழிலாளர்களில் நூற்றுக்கு 60 பேருக்கும் மேற்பட்டோராவர். இந்த ஆண்டில் முதல் ஐந்து மாத காலத்தில், பொருளாதார இறக்கம் தோன்றிய சமயம், வேலையிழந்தவர்களுக்கு 200 கோடி டாலருக்கு மேலாக ஈடுதொகை கிடைத்தது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு தொழிற் சங்க உறுப்பினர் தொகை 30 லட்சம்; இன்று 190 லட்சம்.

---

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Mardas-18

# கவுண்டர் & கம்பெனி
## (பிரைவேட்) லிமிடெட்

**தலைமை ஆபீஸ்:**
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி.

**கிளை ஆபீஸ் & ஷோரூம்**
7/69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

## கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

---

**நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,**

மானேஜிங் டைரக்டர்.



JL
m211, N44KM
N58.15.5

KUMARI MALAR REGD. NO. M. 4819




More Detergent · More Stable · More Protective